I தெசலோனிக்கேயர் - முன்னுரை

காலமும் இடமும்

கிபி. 54 ஆம் ஆண்டு பவுல் இந்த நிருபத்தை கொரிந்துவிலிருந்து எழுதினார். பவுல் எழுதிய 14 நிருபங்களில் இதுவே முதலாவது எழுதப்பட்ட நிருபமாகும்.

ஆசிரியர்

பவுல்

மையக்கருத்து

1. பவுல் ஏற்கெனவே புதிய விசுவாசிகளுக்கு உபதேசம் பண்ணியிருந்த அடிப்படை சத்தியங்களை உறுதிபண்ணுகிறார்.

2. பரிசுத்தத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமென்று புத்தி கூறுகிறார்.

3. கிறிஸ்துவிற்குள் ஏற்கெனவே நித்திரையடைந்திருக்கிறவர்களைக் குறித்து ஆறுதல் கூறுகிறார்.

4. இந்த நிருபத்தில் கூறப்பட்டிருக்கும் சத்தியங்கள் சுமார் ஒரு மாதக்காலத்தில் உபதேசம் பண்ணப்பட்டவையாகும். (அப் 17:1-9)

5. பவுலின் ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்டவர்கள் பெரும்பாலும் புறஜாதி மார்க்கத்திலிருந்து வந்தவர்கள். பவுல் எல்லோருக்கும் தேவனுடைய வல்லமையை உபதேசம் பண்ணினார். புதிய விசுவாசிகள் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தினார்கள். (1தெச 1:8; 1தெச 2:13-14; 1தெச 3:6; 2தெச 1:3,11; 2தெச 2:17).

6. இந்த நிருபத்தின் எல்லா அதிகாரத்திலும் கர்த்தருடைய வருகையைப் பற்றி பவுல் கூறியிருக்கிறார். (1தெச 1:10; 1தெச 2:12,19; 1தெச 3:13; 1தெச 4:13-18; 1தெச 5:1-11).

புள்ளிவிவரங்கள்

அதிகாரங்கள் - 5

வசனங்கள் - 89

கேள்விகள் - 3

புதிய தீர்க்கதரிசனங்கள் - 5

வரலாற்றைக் குறிக்கும் வசனங்கள் - 69

பொருளடக்கம்

I. முன்னுரை

1. ஆசிரியரும் வாழ்த்துரையும் (1:1)
2. ஜெபமும் ஸ்தோத்திரமும் (1:2)

II. முன்மாதிரியான சபை - சபையின் நான்கு அம்ச ஆசீர்வாத நிலைமை (1:3-4)

III. முன்மாதிரியான சுவிசேஷகர் - பிரசங்கம் பண்ணியதை உறுதி பண்ணுகிறார் (1:5)

IV. முன்மாதிரியான விசுவாசிகள் - சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு அதை மற்றவர்களுக்கும் அறிவிக்கிறார்கள் (1:6-10)

V. முன்மாதிரியான ஊழியக்காரர்

1. தைரியமும் உபத்திரவமும் (2:1-2)
2. கண்ணியமும் பரிசுத்தமும் (2:3)
3. நம்பிக்கையும் விசுவாசமும் (2:4)
4. வார்த்தையில் எளிமையும் சுயநலமின்மையும் (2:5)
5. தாழ்மையும் மற்றவரைக் குறித்த கரிசனையும் (2:6)
6. பட்சமும் அன்பும் (2:7-8)
7. சுயதியாகம் (2:9)
8. பிழையில்லாத நடத்தை (2:10)

I தெசலோனிக்கேயர் - முன்னுரை

9. பெற்றோரின் பராமரிப்பும் பயிற்சியும் (2:11-12)

10. சுவிசேஷத்தின் வல்லமை அதை விசுவாசிக்கிற யாவருக்குள்ளும் பெலன் செய்கிறது (2:13)

11. சத்தியத்தை எதிர்க்கும் சாத்தானோடும் துன்மார்க்கரோடும் போராட்டம் (2:14-18)

12. பிரயாசத்திற்கு வெகுமதிகள் (2:19-20)

VI. சபையைக் குறித்து பவுலின் கரிசனை

1. தீமோத்தேயுவின் ஊழியம் (3:1-5)

2. தீமோத்தேயு பவுலிடம் அறிவித்தது (3:6)

3. பவுலின் ஜெபமும் அவர்கள் விசுவாசத்தில் பரிபூரணம் அடையவேண்டும் என்னும் வாஞ்சையும் (3:7-13)

VII. விசுவாசிகள் நடக்க வேண்டிய விதமும் ஆனந்தபாக்கிய நம்பிக்கையும்

1. தேவனைப் பிரியப்படுத்தி பக்தியுடன் நடக்க வேண்டும் என்னும் புத்திமதி (4:1-2)

2. உண்மையான பரிசுத்தமாதல் (4:3-7)

3. அன்பில் பெருக வேண்டும் என்னும் கட்டளை (4:8-10)

4. யோக்கியமாய் நடந்து உலகத்தில் முன்மாதிரியாக ஜீவிக்க வேண்டும் (4:11-12)

5. சபை எடுத்துக்கொள்ளப்படும் விதமும் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் (4:13-18)

VIII. கர்த்தருடைய நாள்

1. கர்த்தருடைய நாளை எவ்வாறு தெரிந்து கொள்வது (5:1-3)

2. கர்த்தருடைய நாள் விசுவாசிகளை திருடனைப்போல பிடித்துக் கொள்ளக்கூடாது (5:4-5)

3. கர்த்தருடைய நாளைக் குறித்து விசுவாசிகள் செய்ய வேண்டிய காரியம் (3:6-8)

4. கர்த்தருடைய நாளுக்கு முன்பாக விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்படுவார்கள் (5:9-11)

IX. நடைமுறை உபதேசங்கள்

1. ஊழியக்காரரை மதிக்க வேண்டும் (5:12-13)

2. கிறிஸ்துவின் வருகையின் நிமித்தம் கிறிஸ்தவருக்கு பதினான்கு கட்டளைகள் (5:14-22)

3. சபை எடுத்துக் கொள்ளப்படும்போது நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவை குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படவேண்டும் (5:23-24)

X. முடிவுரையும் ஆசீர்வாதமும் (5:25-28)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

1 அதிகாரம்

I. முன்னுரை

1. ஆசிரியரும் வாழ்த்துரையும்

1தெச 1:1 பவுலும், சில்வானும், தீமோத்தேயும், பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

"பவுல்" (Paul) - பவுல் தன்னைப் பற்றி எழுதும்போது பொதுவாக "அப்போஸ்தலனாகிய பவுல்" என்று எழுதுவது வழக்கம். ஆயினும் 1, 2 தெசலோனிக்கேயர், பிலிப்பியர், பிலேமோன் ஆகிய நிருபங்களில் பவுல் தன்னைச் சாதாரணமாக "பவுல்" என்றே குறிப்பிடுகிறார். இந்தச் சபையார் பவுலின்மீது அதிகமாக அன்பு வைத்திருந்தார்கள். ஆகையினால் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை இவர்கள் மத்தியில் வலியுறுத்த வேண்டிய அவசியம் பவுலுக்கு ஏற்படவில்லை.

"சில்வானு" (Silvanus) - மறுபெயர் சீலா (Silas). பவுலின் இரண்டாம் மிஷினெரி பிரயாணத்தின்போது உடன் சென்றவர். மக்கெதோனியாவிலுள்ள சபைகளை ஸ்தாபிப்பதில் சில்வானுவும் (சீலாவும்) பங்கு பெற்றிருந்தார். (அப் 15:40-18:18).

"பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபை" - தெசலோனிக்கேயருக்கு எழுதின இரண்டு நிருபங்களில் மட்டுமே இவ்வாறு எழுதப் பட்டிருக்கிறது. மற்ற நிருபங்களில் பவுலின் வாழ்த்துதல் வேறு விதமாக இருக்கும்.

"நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" - பிதாவாகிய தேவனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்கள் என்று இந்த வசனம் இரண்டு முறை வலியுறுத்திக் கூறுகிறது. விசுவாசிகள் பிதாவாகிய தேவனுக்குள்ளும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவிற்குள்ளும் இருக்கிறார்கள். இவர்களிடமிருந்து பவுல் மூலமாக விசுவாசிகளுக்கு வாழ்த்துதல் வருகிறது.

2. ஜெபமும் ஸ்தோத்திரமும்

1தெச 1:2 தேவனுக்குப் பிரியமான சகோதரரே, உங்கள் விசுவாசத்தின் கிரியையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக, நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து,

நினைவுகூரவேண்டிய காரியங்கள்

1. விசுவாசத்தின் கிரியை (Work of faith) - புறஜாதியார்கள் விக்கிரகாராதனையில் இருந்து மெய்யான தேவனிடத்திற்கு மனம் திரும்பியிருக்கிறார்கள்.

2. அன்பின் பிரயாசம் (Labor of love) - ஜீவனுள்ள மெய்யான தேவனை ஆராதிக்கிறார்கள்.

3. நம்பிக்கையின் பொறுமை (Patience of hope) - பரலோகத்திலிருந்து தேவகுமாரன் வருவதற்கு பொறுமையோடு காத்திருக்கிறார்கள்.

"விசுவாசத்தின் கிரியை" - இவர்களுடைய விசுவாசம் செத்த விசுவாசமோ, அல்லது தர்க்கம் பண்ணும் விசுவாசமோ அல்ல. இவர்களுடைய விசுவாசம் ஜீவனுள்ளது. உண்மையுள்ளது. கிரியை நடப்பிக்கக் கூடியது. (1தெச 1:3,5-8; 1தெச 2:13-14; 2தெச 1:3,11; 2தெச 2:17; 2தெச 3:1,9).

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

1 அதிகாரம்

"அன்பின் பிரயாசம்" - அவர்களுடைய விசுவாசத்தின் கிரியையை அன்பின் பிரயாசம் தாங்குகிறது. விசுவாசம் மட்டும் இருந்தால் போதாது. நாம் விசுவாசத்தோடு கிரியையும் நடப்பிக்க வேண்டும். தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வரங்களை அன்புடன் பயன்படுத்த வேண்டும். (1கொரி 13).

II. முன்மாதிரியான சபை - சபையின் நான்கு அம்ச ஆசீர்வாத நிலைமை - (அப் 2:42-47; 4:32-37; 5:12-16)

1தெச 1:3 நீங்கள் தெரிந்துகொள்ளப் பட்டவர்களென்று நாங்கள் அறிந்து,

1தெச 1:4 எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக் குறித்து விண்ணப்பம் பண்ணி, உங்களெல்லாருக்காகவும்எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்.

"தெரிந்துகொள்ளப்பட்டவர்கள்" - பவுல் இங்கே கூறி வரும் புறஜாதியார் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். (லூக்கா 18:7) இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாவத்தில் வீழ்ந்து தேவனை மறுதலித்து விட்டார்கள். ஆகையினால் சுவிசேஷத்திற்குப் பிரதிநிதிகளாக இருக்குமாறு தேவன் அவர்களை அங்கீகரிக்கவில்லை. அவர்களுடைய இடத்தில் தேவன் புறஜாதியாரைத் தெரிந்து கொண்டார். (மத் 21:43; மத் 23:37-39; ரோமர் 11:11-29). தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இறுமாப்போடு இருக்க முடியாது. மிகுந்த எச்சரிப்போடு இருக்க வேண்டும். ஏனெனில் தேவனுடைய தெரிந்தெடுப்பு நிபந்தனைக்குட்பட்டது. தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர் பாவத்தில் விழும்போது அவர் தன்னுடைய தெரிந்தெடுப்பின் சிலாக்கியத்தை இழந்து போகிறார். தேவன் யூதமார்க்கத்தாரை 2,300 வருஷங்களாக தம்முடைய பிள்ளைகளாகத் தெரிந்து கொண்டார். ஆனால் இப்போது அவர்கள் தேவனால் புறக்கணிக்கப் பட்டவர்களாக இருக்கிறார்கள். (ரோமர் 11)

"எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக் குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்" - பிலி 1:3-4, கொலோ 1:3 ஆகிய வசனங்களில் இதே கருத்தும், இதே வார்த்தைகளும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

III. முன்மாதிரியான சுவிசேஷகர் - பிரசங்கம் பண்ணியதை உறுதி பண்ணுகிறார் - (மத் 4:23; 10:1-8; 28:19-20; மாற்கு 16:15-20; அப் 1:1,8; ரோமர் 15:18-19,29; 1கொரி 2:4; 4:18-21; எபி 2:1-4)

1தெச 1:5 எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர் களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்கள்.

சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவேண்டிய விதம்

1. வசனத்தோடு **(In word)** (1தெச 1:5; மத் 28:20; மாற்கு 16:15; லூக்கா 24:47; 1கொரி 1:18-24)

2. வல்லமையோடு **(In power)** (1தெச 1:5; மத் 17:20; மாற்கு 16:16-17; லூக்கா 24:49; யோவான் 14:12; 1கொரி 4:20)

3. பரிசுத்த ஆவியோடு **(In the Holy Spirit)** (1தெச 1:5; லூக்கா 24:49; அப் 1:4-8; ரோமர் 15:18-20,29; எபி 2:4)

4. முழு நிச்சயத்தோடு **(In much assurance)** (1தெச 1:5; கொலோ 2:2)

"பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத்தோடும்" - சுவிசேஷத்தைப் பரிசுத்த ஆவியோடும் முழு நிச்சயத்தோடும், வல்லமையோடும் பவுல் பிரசங்கம் பண்ணினார். அதற்காக அவர் பல பாடுகளையும் அனுபவித்தார். (1தெச 1:6; அப் 17).

1 அதிகாரம்

IV. **முன்மாதிரியான விசுவாசிகள் - சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டு அதை மற்றவர்களுக்கும் அறிவிக்கிறார்கள்** - (மாற்கு 16:17-20; அப் 8:4; 11:19-21; பிலி 1:7)

1தெச 1:6 நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி,

1தெச 1:7 இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்.

1தெச 1:8 எப்படியெனில், உங்களிடத்திலிருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்ல வேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று.

1தெச 1:9 ஏனெனில், அவர்கள் தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென்பதையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ் செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும்,

1தெச 1:10 அவர் மரித்தோரிலிருந்து எழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிற வருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே.

பின்பற்றுகிறவர் (**followers**) - **μιμητής** - **mimeetees** - 3402

ஆண்பால் பெயர்ச்சொல் - பின்பற்றுகிறவர் (1கொரி 4:16)

உபத்திரவம் (**affliction**) - **θλῖψις** - **thlipsis** - 2347

பெண்பால் பெயர்ச்சொல் - உபத்திரவம், வருத்தம் (பிலி 4:14)

"பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே" - தேவனுடைய வார்த்தையைப் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்ள வேண்டும். விசுவாசிகளிடத்தில் இந்த சந்தோஷம் எப்பொழுதும் காணப்பட வேண்டும். ஆதித்திருச் சபையில் தேவனுடைய வல்லமை வெளிப்பட்டுக் கொண்டேயிருந்தது. அதனால் விசுவாசிகள் எப்போதும் பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே சுவிசேஷத்தை ஏற்றுக் கொண்டார்கள். அப்பேர்ப்பட்ட தெய்வீக வல்லமை தற்காலத்திலும் திருச்சபைகளில் வெளிப்பட வேண்டும். (1தெச 1:3,5; 1தெச 2:13-14; 2தெச 1:3,11; 2தெச 2:17; 2தெச 3:1,9; எபி 2:4)

மாதிரிகள் (**ensamples**) - **τυπικῶς** - **typikoos** - 5179

ஆண்பால் பெயர்ச்சொல் - சொரூபம், மாதிரிரூபம், திருஷ்டாந்தம் (பிலி 3:17) - மக்கெதோனியாவிலும், அகாயாவிலும் உள்ள சபைகளுக்கு இந்த விசுவாசிகள் மாதிரிகளானார்கள். (1தெச 1:7-8) விசுவாசத்தின் பொறுமைக்காக மட்டுமல்லாமல், விசுவாசிக்கிறவர்கள் மூலமாக நடைபெறும் அற்புதங்களுக்கும், அடையாளங்களுக்கும் இவர்கள் மாதிரிகளானார்கள். (1தெச 2:13-14; 2தெச 1:11). இவர்கள் கர்த்தரையும், அப்போஸ்தலரையும் பின்பற்றினார்கள். (1தெச 1:6) யூதேயாவிலுள்ள திருச்சபையார் தேவனுடைய வல்லமையை வெளிப்படுத்தினார்கள். (1தெச 2:13-14; அப் 2:43; அப் 3:6; அப் 5:16; அப் 6:3,8; அப் 11:21).

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

1 அதிகாரம்

தொனித்தது (sounded out) -ἐξηχέω - **exeecheoo** - 1837

வினைச்சொல் - தொனி (to sound forth; publish) - தெசலோனிக்கேயாவிலிருந்து ஊழியக்காரர்கள் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்கவும், தேவனுடைய வார்த்தையை உறுதி பண்ணவும், மக்கெதோனியா, அகாயா ஆகிய பிற இடங்களுக்கும் சென்றார்கள். ஆதித்திருச்சபையார் இயேசு கிறிஸ்துவின் பிரதான கற்பனைக்குக் கீழ்ப்படிந்தார்கள். (மத் 28:19-20; மாற்கு 16:15-20; லூக்கா 24:47; யோவான் 17:17-19; அப் 1:4-8). இவர்களோடு தெசலோனிக்கேயாவிலிருந்து சென்ற வணிகர்களும் சுவிசேஷச் செய்தியைப் பல இடங்களுக்கும் எடுத்துச் சென்றார்கள்.

"தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று" - புறஜாதியார் இவர்களுடைய விசுவாசத்தையும் வல்லமையையும் குறித்து அனுதினமும் பேசிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் மூலமாக வல்லமையான கிரியை வெளிப்படவில்லை யென்றால், இவர்களைப் பற்றி யாரும் பேசமாட்டார்கள். இவர்களுடைய விசுவாசமும் எங்கும் பிரசித்தமாகாது.

"நீங்கள் விக்கிரகங்களை விட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும்" - இங்கு விசுவாசிகளாக இருக்கிறவர்கள் ஒருகாலத்தில் விக்கிரகங்களுக்கு ஆராதனை செய்த புறஜாதியாராக இருந்தார்கள். இப்பேர்ப்பட்டவர்கள் ஜீவனுள்ள மெய்யான தேவனை ஆராதிக்குமாறு மனந்திரும்பியிருக்கிறார்கள். பரலோகத்திலிருந்து தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (1தெச 1:10).

"ஜீவனுள்ள மெய்யான தேவன்" - புறஜாதியார்கள் ஜீவனில்லாத விக்கிரகங்களை ஆராதனை செய்து வந்தார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோ ஜீவனுள்ள மெய்யான தேவன்.

1தெச 1:9-10 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் கிறிஸ்தவ உபதேசங்கள்

1. மனந்திரும்புதல் (1தெச 1:9; மத் 18:3)
2. ஜீவனுள்ள மெய்யான தேவன் (1தெச 1:9; யோவான் 17:3)
3. விக்கிரகங்களை விட்டுவிடுதல் (1தெச 1:9; 1கொரி 8)
4. தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து (1தெச 1:10; யோவான் 3:16)
5. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (1தெச 1:10)
6. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் (1தெச 1:10)
7. இனிவரும் கோபாக்கினையினின்று நீங்கலாக்கி இரட்சிக்கப்படுதல் (1தெச 1:10)

தீர்க்கதரிசன எண் - 1

"அவர் மரித்தோரிலிருந்தெழுப்பின வரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும்" (1தெச 1:10) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

V. முன்மாதிரியான ஊழியக்காரர்

1. தைரியமும் உபத்திரவமும் - *(அப் 4:13; பிலி 1:12-20)*

1தெச 2:1 சகோதரரே, நாங்கள் உங்களிடத்தில் பிரவேசித்தது வீணாயிருக்கவில்லை என்று நீங்களே அறிந்திருக்கிறீர்கள்.

1தெச 2:2 உங்களுக்குத் தெரிந்திருக்கிற படி, முன்னே பிலிப்பிபட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடைந்திருந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும் படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங் கொண்டிருந்தோம்.

சத்தியத்தைப் பற்றிய அறிவு

தெசலோனிக்கேயர் சத்தியத்தைப் பற்றி அறிந்திருக்கும் காரியங்களைப் பவுல் இந்த நிருபத்தில் பல வசனங்களில் கூறியிருக்கிறார். அவையாவன:

1. நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப் பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே. *(1தெச 1:5)*
2. நாங்கள் உங்களிடத்தில் பிரவேசித்தது வீணாயிருக்கவில்லை என்று நீங்களே அறிந்திருக்கிறீர்கள். *(1தெச 2:1)*
3. உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, முன்னே பிலிப்பி பட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடைந்திருந்தும், வெகு போராட்டத்தோடே தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குச் சொல்லும் படி, நம்முடைய தேவனுக்குள் தைரியங் கொண்டிருந்தோம். *(1தெச 2:2)*
4. உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை. பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணவுமில்லை. *(1தெச 2:5)*
5. தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள். *(1தெச 2:12)*
6. இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோ என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே. நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திருந்தபோது, உங்களுக்கு முன்னறிவித்தோம்; அப்படியே வந்து நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள். *(1தெச 3:3-4)*
7. கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே. *(1தெச 4:2)*
8. தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து: *(1தெச 4:4-5)*
9. இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். *(1தெச 5:2)*
10. கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து, அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். *(1தெச 5:12)*
11. அவன் தன் காலத்திலே வெளிப்படும் படிக்கு, இப்பொழுது அவனைத் தடை செய்கிறது இன்னதென்றும் அறிந்திருக்கிறீர்களே. *(2தெச 2:6-8)*

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

12. இன்னவிதமாய் எங்களைப் பின்பற்ற வேண்டுமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே; (2தெச 3:7)

"அறியாமலிருக்கிறீர்களா" என்று பவுல் கூறியிருக்கும் காரியங்கள்

1. கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமல் இருக்கிறீர்களா?

2. மரணத்துக் கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக்கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்கள் என்று அறியீர்களா?

3. நியாயப் பிரமாணத்தை அறிந்திருக்கிறவர் களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப்பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமல் இருக்கிறீர்களா? (ரோமர் 7:1; 1தெச 2:12-16)

4. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர் களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறா என்றும் அறியாதிருக்கிறீர்களா? (1கொரி 3:16)

5. நீங்களும் மேன்மை பாராட்டுகிறது நல்லதல்ல; கொஞ்சம் புளித்தமா பிசைந்த மா முழுவதையும் புளிப்பாக்குமென்று அறியீர்களா? (1கொரி 5:6)

6. பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்கள் என்று அறியீர்களா? (1கொரி 6:2)

7. தேவ தூதர்களையும் நியாயந் தீர்ப்போமென்று அறியீர்களா? (1கொரி 6:3)

8. அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை என்று அறியீர்களா? (1கொரி 6:9)

9. உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயங்களென்று அறியீர்களா? (1கொரி 6:15)

10. வேசியோடு இசைந்திருக்கிறவன் அவளுடனே ஒரே சரீரமாயிருக்கிறா என்று அறியீர்களா? (1கொரி 6:16)

11. உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறது என்றும், நீங்கள் உங்களுடையவர்களல்ல என்றும் அறியீர்களா? (1கொரி 6:19-20)

12. பந்தயச் சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? (1கொரி 9:24)

"வீணாயிருக்கவில்லை" - நல்லதொரு சபை ஸ்தாபிக்கப்பட்டது. (அப் 17).

"முன்னே பிலிப்பி பட்டணத்திலே நாங்கள் பாடுபட்டு நிந்தையடைந்திருந்தும்" - (அப் 16:16-40)

போராட்டம் **(contention)** - **ἀγών** - **agoon** - 73

ஆண்பால் பெயர்ச்சொல் **(conflict)** (பிலி 1:30)

(அ) விளையாட்டுப்போட்டி, ஓட்டம்

(ஆ) கிறிஸ்தவ வாழ்க்கையின் போராட்டம் பிலி. 1:30

(இ) ஆர்வத்தினால் ஏற்படும் மனப்போராட்டம் 2 கொலோ. 2:1

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

2. கண்ணியமும் பரிசுத்தமும் - (2கொரி 4:1-2; அப் 20:26; 1தீமோ 4:12)

1தெச 2:3 எங்கள் போதகம் வஞ்சகத்தினாலும் துராசையினாலும் உண்டாகவில்லை, அது கபடமுள்ளதாயுமிருக்கவில்லை.

போதகம் (exhortation) - παράκλησις - parakleesis - 3874

பெண்பால் பெயர்ச்சொல் - ஆறுதல், புத்திசொல்தல் (அப் 13:15)

மெய்யான போதகத்தின் அம்சங்கள்

1. வஞ்சகத்தினால் உண்டாகவில்லை.
2. துராசையினால் உண்டாகவில்லை
3. கபடமுள்ளதாயிருக்கவில்லை.

வஞ்சகம் (deceit) - πλάνη - planee - 4106

பெண்பால் பெயர்ச்சொல் - எத்து, தப்பிதம், வஞ்சகம் (fraudulence; straying from orthodoxy, piety) "deceit" (1தெச 2:3); "deceive" (எபே 4:14); "delusion" (2தெச 2:3); "error" (மத் 27:64; ரோமர் 1:27, யாக் 5:20; 2பேதுரு 2:18; 2பேதுரு 3:17; 1யோவான் 4:6; யூதா 1:11).

துராசை (uncleanness) - ἀκαθαρσία - akatharsia - 167

(அ) அசுத்தம். சரீரப்பிரகாரமான அசுத்தம் மத். 23:27

(ஆ) ஆன்மீக அசுத்தம் ரோம. 1:24 (கொலோ 3:5; ரோமர் 8:12-13).

கபடம் (guile) δόλος - dolos - 1388

ஆண்பால் பெயர்ச்சொல் - தந்திரம், கபடம், வஞ்சகம், வஞ்சனை (ரோமர் 1:29; அப் 13:10).

3. நம்பிக்கையும் விசுவாசமும் - (1தீமோ 1:11-12; ரோமர் 1:14-15)

1தெச 2:4 சுவிசேஷத்தை எங்களிடத்தில் ஒப்புவிக்கத்தக்கதாய், தேவன் எங்களை உத்தமரென்றெண்ணின படியே, நாங்கள் மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதிக்கிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்.

சோதித்துப்பார் (allowed) - δοκιμάζω - dokimazoo - 1381

வினைச்சொல் - நிதானி, சோதித்துப்பார், வகையறு, பகுத்தறி, பரீட்சைப்பார், தகுதியைக்குறி, கண்டறி (test) (2கொரி 13:5)

பவுலுடைய பிரசங்கத்தின் அம்சங்கள்

1. வீணாயிருக்கவில்லை.(1தெச2:1,13-20)
2. நிந்தனைகளுக்கு நடுவில் பிரசங்கம் பண்ணினார் (1தெச 2:2)
3. வெகுபோராட்டத்திற்கு நடுவில் பிரசங்கம் பண்ணினார். (1தெச 2:2)
4. தைரியத்தோடே பிரசங்கம் பண்ணினார். (1தெச 2:2)
5. வஞ்சத்தினால் பிரசங்கம் பண்ணவில்லை. (1தெச 2:3)
6. அவருடைய போதகம் துராசையினால் உண்டாகவில்லை. (1தெச 2:3)
7. அவருடைய போதகம் கபடமுள்ளதாயிருக்க வில்லை. (1தெச 2:3)
8. தேவன் சுவிசேஷத்தைப் பவுலிடம் ஒப்படைத்தார். (1தெச 2:4)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

9. மனுஷருக்கல்ல, தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசினார். (1தெச 2:4)

10. இச்சகமான வசனங்களைச் சொல்லவில்லை. (1தெச 2:5)

11. பொருளாசையுள்ளவராய் மாயம் பண்ணவில்லை. (1தெச 2:5; லூக்கா 12:15)

12. மனுஷரால் வரும் மகிமையைத் தேடவில்லை. (1தெச 2:6)

13. எந்தவித பொருளாதார ஆதாயத்தை எதிர்பாராமல் ஊழியம் செய்தார். (1தெச 2:6,9)

14. பொறுமையோடும், பட்சமாகவும் நடந்து கொண்டார். (1தெச 2:7,14)

15. அன்புடன் பிரசங்கம் பண்ணினார். (1தெச 2:15)

16. தன்னுடைய ஜீவனை இழப்பதற்கும் ஆதாயமாக இருந்தார். (1தெச 2:16)

17. இரவும், பகலும் வேலை செய்தார். (1தெச 2:9)

18. தான் பிரசங்கித்த பிரகாரம் ஜீவித்தார். (1தெச 2:10)

19. அவருடைய பிரசங்கம் பூரணமாக இருந்தது. (1தெச 2:11)

20. அவருடைய நோக்கம் சரியானது. (1தெச 2:12)

21. சுவிசேஷத்தின் மூலமாக ஏற்பட்ட நல்ல விளைவுகளுக்காக தேவனை இடைவிடாமல் ஸ்தோத்திரம் பண்ணினார். (1தெச 2:13-20)

"மனுஷருக்கு அல்ல, எங்கள் இருதயங்களைச் சோதிக்கிற தேவனுக்கே பிரியமுண்டாகப் பேசுகிறோம்" - (கலா 1:10, எபி 11:6)

4. **வார்த்தையில் எளிமையும் சுயநலமின்மையும்**- (1கொரி 2:1-5; 2தெச 2:7-9; அப் 20:33-35)

1தெச 2:5 உங்களுக்குத் தெரிந்திருக்கிற படி, நாங்கள் ஒருக்காலும் இச்சகமான வசனங்களைச் சொல்லவுமில்லை. பொருளாசையுள்ளவர்களாய் மாயம் பண்ணவுமில்லை; தேவனே சாட்சி.

இச்சகம் (cloke) - πρόφασις - **prophasis** - 4392

பெண்பால் பெயர்ச்சொல் - வஞ்சகம், பார்வை, பாவனை, இச்சகம் **(pretense, excuse) "cloke"** (1தெச 2:5; யோவான் 15:22); **"shew"** (லூக்கா 20:47); **"colour"** (அப் 27:30); **"pretence"** (மத் 23:14; மாற்கு 12:40; பிலி 1:18)

"பொருளாசை" - (லூக்கா 12:15)

5. **தாழ்மையும் மற்றவரைக் குறித்த கரிசனையும்** - (அப் 20:33-35)

1தெச 2:6 நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும், உங்களிடத்திலாவது, மற்றவர் களிடத்திலாவது, மனுஷரால் வரும் மகிமையை நாங்கள் தேடவில்லை.

"நாங்கள் கிறிஸ்துவின் அப்போஸ்தலராக உங்களுக்குப் பாரமாயிருக்கக் கூடியவர்களானாலும்" - பவுல் அப்போஸ்தல ஊழியம் செய்து வருகிறார். இந்த ஊழியத்திற்காக விசுவாசிகளிடத்தில் ஊதியத்தைப் பெற்றுக் கொள்ளும் உரிமையுள்ளவர். (லூக்கா 10:7; 1கொரி 9:7-18; கலா 6:6). ஆயினும் பவுல் இந்த உரிமைகளைப் பயன்படுத்தி விசுவாசிகளிடமிருந்து எந்தவிதமான ஊதியத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை.

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

6. பட்சமும் அன்பும் - (2தீமோ 2:22-26; கலா 5:22-23)

1தெச 2:7 உங்களிடத்தில் பட்சமாய் நடந்து கொண்டோம்; பால் கொடுக்கிற தாயானவள் தன் பிள்ளைகளைக் காப்பாற்றுகிறது போல,

1தெச 2:8 நாங்கள் உங்கள் மேல் வாஞ்சையாயிருந்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களுக்குக் கொடுத்ததுமல்லாமல், நீங்கள் எங்களுக்குப் பிரியமானவர்களான படியினாலே, எங்கள் ஜீவனையும் உங்களுக்குக் கொடுக்க மனதாயிருக்கிறோம்.

பட்சம் (gentle) - νήπιος - neepios - 3516

பெயரடை - பட்சம், பாலகரான, குழந்தையாயிருக்கிற, சிறுபிள்ளையான (simple minded)

பால் கொடுக்கிற தாய் (nurse) - τροφός - trophos - 5162

பெண்பால் பெயர்ச்சொல் - அம்மா, தாதி (nurse, feeder) - இந்த வார்த்தை தன் பிள்ளைகளுக்குப் பால் கொடுக்கும் தாயைக் குறிக்கும்.

7. சுயதியாகம் - (அப் 20:33-35; 2தெச 2:7-9)

1தெச 2:9 சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்; உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்.

8. பிழையில்லாத நடத்தை - (2கொரி 6:3; எபே 1:4; பிலி 2:15; 1தீமோ 3:2,10; தீத்து 1:6-7; 2பேதுரு 3:14)

1தெச 2:10 விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி.

கிறிஸ்தவ ஜீவியத்தில் காணப்பட வேண்டிய முக்கியமான குணங்கள்

1. பரிசுத்தம்
2. நீதி
3. பிழையின்மை

பரிசுத்தம் (Holily) - ὁσίως - hosioos - 3743

வினையடை - பரிசுத்தமாய் - தேவனுக்கு ஏதுவான பரிசுத்தம்.

நீதி (Justly) - δικαίως - dikaioos - 1346

வினையடை - நியாயப்படி, நீதிக்கேற்ப, நீதியுமாய், நியாயமாய் (righteous, just) - மனுஷனுக்கு ஏற்ற நீதி.

பிழையின்மை (Unblameably) - ἀμέμπτως - amemptoos - 274

வினையடை - பிழையின்மையாய், குற்றமற்றதாய் - தேவனுக்கும், மனுஷனுக்கும் முன்பாகப் பிழையற்ற நடத்தையும், ஜீவியமும்.

9. பெற்றோரின் பராமரிப்பும் பயிற்சியும் - (எபே 1:15-19; 3:13-21)

1தெச 2:11 மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டுமென்று,

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

1தெச 2:12 தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்.

"தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டும்" - (எபே 4:1)

"தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவன்" - எல்லா விசுவாசிகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கும் உன்னதமான அழைப்பு.

மூன்றுவிதமான ஊழியம்

1. புத்தி சொல்லுதல்
2. தேற்றுதல்
3. எச்சரிப்பு சொல்லுதல்

எச்சரிப்பு (Exhortation) - παρακαλέω - parakaleoo - 3870

வினைச்சொல் - வேண்டிக்கொள், வருந்தியழை, புத்திச்சொல், எச்சரி, கேட்டுக்கொள், தேற்று, கடிந்துகொள், போதி, மன்றாடு (2கொரி 1:4)

தேற்று (Comforting) - παραμυθέομαι - paramutheomai - 3888.

வினைச்சொல் - ஆறுதல் சொல், தேற்று (1தெச 2:14, 5:14; யோவான் 11:19,31)

எச்சரி (testify) - μαρτύρομαι - martyromai - 3143

வினைச்சொல் - சாட்சியாக வை, சாட்சியாகச்சொல் "record" (அப் 20:26) "testify" (கலா 5:3; எபே 4:17)

"தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல" - பவுலிடம் ஒரு போதகருடைய ஆவி இருந்தது. விசுவாசிகளை தாயைப்போல நேசித்து தந்தையைப் போல புத்தி கூறி ஆதரிக்கிறார். (1தெச 2:7,11)

10. சுவிசேஷத்தின் வல்லமை அதை விசுவாசிக்கிற யாவருக்குள்ளும் பெலன் செய்கிறது - (மத் 18:18)

1தெச 2:13 ஆகையால், நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல், தேவவசனமாக ஏற்றுக் கொண்டதினாலே நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது.

"இடைவிடாமல்" - (1தெச 1:3; 1தெச 2:13; 1தெச 5:17; 2தெச 1:3; ரோமர் 1:9)

"நீங்கள் தேவவசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது" - தெசலோனிக்கேயர் தேவவசனத்தை மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளாமல் தேவ வசனமாகவே ஏற்றுக் கொண்டார்கள். விசுவாசிக்கிற அவர்களுக்குள் தேவ வார்த்தை கிரியை நடப்பிக்கிறது.

பலன் செய்தல் (effectually) - ἐνεργέω - energeoo - 1754

வினைச்சொல் - விளங்கச்செய், கையளி, உண்டாக்கு, பலன் செய் "work effectually" (1தெச 2:13; கலா 2:8; 2கொரி 1:6); "effectual fervent" (யாக் 5:16); "show forth one's self" (மத் 14:2; மாற்கு 6:14); "do" (பிலி 2:13); "be mighty in" (கலா 2:8); "to work" (ரோமர் 7:5; 1கொரி 12:6,11; 2கொரி 4:12; கலா 3:5; கலா 5:6; எபே 1:11,20; எபே 2:2; எபே 3:20; பிலி 2:13; கொலோ 1:29; 2தெச 2:7). தேவனுடைய வார்த்தைக்கு வல்லமையுள்ளது. விசுவாசிகளுடைய ஜீவியத்தில் அது பலன் செய்கிறது. (சங் 19:7; சங் 107:20; யோவான் 15:7; ரோமர் 1:16; ரோமர் 10:17; எபி 4:12).

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

11. சத்தியத்தை எதிர்க்கும் சாத்தானோடும் துன்மார்க்க ரோடும் போராட்டம் - (பிலி 1:27-30; கொலோ 2:1; 1தெச 2:18)

1தெச 2:14 எப்படியெனில், சகோதரரே, யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை நீங்கள் பின்பற்றினவர்களாகி, அவர்கள் யூதராலே எப்படிப் பாடுபட்டவர்களோ, அப்படியே நீங்களும் உங்கள் சுய ஜனங்களாலே பாடுபட்டீர்கள்.

1தெச 2:15 அந்த யூதர்கள் கர்த்தராகிய இயேசுவையும், தங்கள் தீர்க்கதரிசிகளையும் கொலை செய்தவர்களும், எங்களைத் துன்பப்படுத்தின வர்களும், தேவனுக்கேற்காதவர்களும், மனுஷர் யாவருக்கும் விரோதிகளுமாயிருந்து,

1தெச 2:16 புற ஜாதியார் இரட்சிக்கப் படுவதற்கு நாங்கள் அவர்களோடே பேசாதபடிக்குத் தடை பண்ணுகிறார்கள்; இவ்விதமாய் எக்காலத்திலும் தங்கள் பாவங்களை நிறைவாக்குகிறார்கள்; அவர்கள் மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது.

1தெச 2:17 சகோதரரே, நாங்கள் இருதயத்தின்படி உங்களோடிருந்து, சரீரத்தின்படி கொஞ்சக்காலம் உங்களை விட்டுப் பிரிந்திருந்த படியினாலே, உங்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம் பண்ணினோம்.

1தெச 2:18 ஆகையால், நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொருதரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வர மனதாயிருந்தேன்; சாத்தானோ எங்களைத் தடை பண்ணினான்.

"யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான" - ரோமாபுரியிலுள்ள சபையைப் பற்றியும், அந்தச் சபைக்கு பேதுரு பேராயராக இருந்தது பற்றியும் குறிப்பு எதுவும் இல்லை. யூதேயா தேசத்திலுள்ள சபையே பிரதான சபையாகவும், மற்ற விசுவாசிகளுக்கு மாதிரி சபையாகவும் விளங்கிற்று.

"நீங்களும் உங்கள் சுய ஜனங்களாலே பாடுபட்டீர்கள்" - யூதரும், புறஜாதியாரும் தங்களுடைய சொந்த ஜனங்களால் பாடுகளை அனுபவித்தார்கள். எல்லா இடங்களிலும் ஸ்தாபிக்கப்பட்ட சபைகளை யூதர்கள் துன்புறுத்தினார்கள். புறஜாதி தேசங்களில் கிறிஸ்தவ மார்க்கத்திற்கு எதிராக புறஜாதி ஜனங்கள் கலகம் பண்ணினார்கள். (அப் 13:6,45,50; அப் 14:2,5,19; அப் 15:1-2,5; அப் 16:3; அப் 17:5,13; அப் 18:5-6).

யூத ஜனங்கள் செய்த பாவங்கள்

1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் கொலை செய்தார்கள். (1தெச 2:15; மத் 2:23).
2. தங்கள் தீர்க்கதரிசிகளைக் கொலை செய்தார்கள். (1தெச 2:15; மத் 23).
3. சபையைத் துன்பப்படுத்தினார்கள்.
4. தேவனுக்கு ஏற்காதவர்களாக இருந்தார்கள். (1தெச 2:15; அப் 7:51).
5. மனுஷர் யாவருக்கும் விரோதிகளாக இருந்தார்கள். (1தெச 2:15; மத் 23).
6. புறஜாதியார் இரட்சிக்கப்படுவதற்கு தடை பண்ணினார்கள். (1தெச 2:16).
7. தங்கள் பாவங்களை நிறைவாக்கினார்கள். (1தெச 2:16).

"அவர்கள் மேல் கோபாக்கினை பூரணமாய் வந்திருக்கிறது" - யூதமார்க்கத்தார் தேவனுக்கும், தேவனுடைய சபையாருக்கும் எதிராக பாவம் செய்த படியினால் தேவனுடைய கோபாக்கினை அவர்கள்மீது பூரணமாக வந்திருக்கிறது. (லேவி 26; உபா 28; உபா 32; மத் 23:34-39; லூக்கா 21:20-24; ரோமர் 11, 1தெச 2:15)

2 அதிகாரம்

பிரிந்திரு (being taken) - **ἀπορφανίζω** - **aporphanizoo** - 642

வினைச்சொல் - பிரிந்திரு **(having been bereaved)** - தன்னுடைய பிள்ளைகளை விட்டு பிரிந்திருக்கும் பெற்றோருக்குப் பவுல் தன்னை ஒப்பிட்டுக் கூறுகிறார். (1தெச 2:7,11) பிள்ளைகளைப் பிரிந்திருக்கும் பெற்றோர் அவர்களையே நினைத்து, வருந்திக் கொண்டிருப்பார்கள். அதுபோன்ற வருத்தம் பவுலுக்கும் இருந்தது. அவர்களைக் காண வேண்டுமென்று பவுல் பலமுறை முயற்சி செய்தும் சாத்தானுடைய தடையினால் அவர்களைக் காணமுடியவில்லை. (1தெச 2:18)

தடைப்பண்ணு **(hindered)** - **ἐγκόπτω** - **enkoptoo** - 1465

வினைச்சொல் - தடைப்பண்ணு, தடைப்படு, தடைசெய் **(hinder)** (1தெச 2:18; ரோமர் 15:22) **(be tedious unto)** (அப் 24:4). பவுல் தன்னுடைய பாடுகளைப் பற்றி 2கொரி 11:23-28 ஆகிய வசனங்களில் குறிப்பிட்டிருக்கிறார். சாத்தான் பவுலை இந்த பாடுகள் மூலமாகத் தடை பண்ணியிருக்கலாம்.

12. பிரயாசத்திற்கு வெகுமதிகள் - (1கொரி 3:11-15; 2கொரி 2:10)

1தெச 2:19 எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்;

1தெச 2:20 நீங்களே எங்களுக்கு மகிமையும் சந்தோஷமுமாயிருக்கிறீர்கள்.

தீர்க்கதரிசன எண் - 2

“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்;” (1தெச 2:19) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

“நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது” - சபையை எடுத்துக் கொள்வதற்காக இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் வருவதைக் குறிக்கும். இந்த வாக்கியம் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்காது. 1தெச 3:13; 1தெச 4:13-17; 1தெச 5:8; 2தெச 2:7)

சபை எடுத்துக் கொள்ளப்படுவதும், இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையும்

இவ்விரண்டும் வெவ்வேறு நிகழ்ச்சிகள். இவ்விரண்டு நிகழ்ச்சிகளுக்கு இடையில் குறைந்த பட்சம் ஏழு வருஷம் இடைவெளி உள்ளது.

சபை எடுத்துக் கொள்ளப்படுவது முதலாவது நடைபெறும் நிகழ்ச்சியாகும். இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்திற்கு வந்து சபையை எடுத்துக் கொள்வார். மத்திய ஆகாயத்தில் தம்முடைய பரிசுத்தவான்களைச் சந்தித்து அவர்களைத் தம்மோடு பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார். பரலோகத்தில் அவர்களைப் பிதாவின் சமூகத்தில் அர்ப்பணிப்பார். அவர்கள் இயேசு கிறிஸ்துவோடு பரலோகத்தில் வாசம் பண்ணுவார்கள். அக்காலத்தில் பூமியில் மகா உபத்திரவக்காலம் உண்டாயிருக்கும். (1தெச 3:13; யோவான் 14:1-3). பரிசுத்தவான்களை இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்தில் சந்தித்த பின்பு அவர் அங்கேயே தங்கிவிடுவதில்லை. (1தெச 4:13-17) ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்தும் பரிசுத்தவான்களின் நியாயத்தீர்ப்பும் பரலோகத்தில் நடைபெறும். பூமியில் மகா உபத்திரவக்காலம் முடிந்த பின்பு இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு பூமிக்கு வருவார். (2கொரி 5:10; வெளி 19). சபை எடுத்துக் கொள்ளப்படுவது என்பது இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களைப் பரலோகத்திற்கு அழைத்துச் செல்வதற்காக மத்திய ஆகாயத்திற்கு வரும் நிகழ்ச்சியைக் குறிக்கும்.

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

2 அதிகாரம்

இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு பூமிக்கு வருவது இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்னப் படுகிறது. மகா உபத்திரவத்திற்கு முன்பாக எடுத்துக் கொள்ளப்பட்ட பரிசுத்தவான்கள் இயேசு கிறிஸ்துவோடு பூமிக்கு வருவார்கள். வெளி 1:1-19:21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் காரியங்கள் நிறைவேறின பின்பு இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நடைபெறும்.

சபை எடுத்துக் கொள்ளப்படுவதை விளக்கும் வசனங்கள்

1. உங்கள் இருதயங்கள் பெருந் திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையா நேரத்தில் அந்த நாள் உங்கள்மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்(லூக்கா 21:34).

2. உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு.........ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்.........நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன். (யோவான் 14:1-3).

3. இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரை அடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப் படுவோம்............மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். (1கொரி 15:51-56).

4. கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து........ மகிமையுள்ள சபையாக அதைத் தமக்கு முன் நிறுத்திக் கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக் கொடுத்தார். (எபே 5:25-27).

5. அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன். (பிலி 3:11) நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப் படுத்துவார். (பிலி 3:20-21) பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்........ அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம். (2கொரி 5:1-9).

6. நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை............இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள். (1தெச 4:13-18)

எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர்கள் யார்? நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது அவருடைய சந்நிதானத்திலே நீங்களல்லவா அப்படியிருப்பீர்கள்; (1தெச 2:19)

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக. (1தெச 3:13)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார் (1தெச 5:9).

சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவிஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும் படி காக்கப்படுவதாக. (1தெச 5:23)

7. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்திலே சேர்க்கப்படுவதையுங் குறித்து, நாங்கள் உங்களை வேண்டிக்கொள்ளுகிறது. (2தெச 2:1)

அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார். (2தெச 2:7-8)

8. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள். (கொலோ 3:4)

அவர் வெளிப்படும்போது நாம் அவர் வருகையில் அவருக்கு முன்பாக வெட்கப்பட்டுப் போகாமல் தைரியமுள்ளவர்களாயிருக்கும்படிக்கு அவரில் நிலைத்திருங்கள். (1யோவான் 2:28)

பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம், இனி எவ்விதமாயிருப்போமென்று இன்னும் வெளிப்படவில்லை; ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற வண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந்திருக்கிறோம். (1யோவான் 3:2)

பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். (1பேதுரு 5:4).

9. கர்த்தர் வருமளவும் நீடிய பொறுமையாயிருங்கள். இதோ, பயிரிடுகிறவன் பூமியின் நற்பலனை அடையவேண்டுமென்று, முன்மாரியும் பின்மாரியும் வருமளவும், நீடிய பொறுமையோடே காத்திருக்கிறான். நீங்களும் நீடிய பொறுமையோடிருந்து, உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துங்கள்; கர்த்தரின் வருகை சமீபமாயிருக்கிறதே. (யாக் 5:7-8).

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை விளக்கும் வசனங்கள்

1. அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும். இனிமேல் சம்பவிக்கப்போகிறதை மகா தேவன் ராஜாவுக்குத் தெரிவித்திருக்கிறார்; சொப்பனமானது நிச்சயம், அதின் அர்த்தம் சத்தியம் என்றான். (தானி 2:44-45)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

2 அதிகாரம்

இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, மனுஷ குமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் சமீபத்தில் கொண்டு வரப்பட்டார். சகல ஜனங்களும் ஜாதியாரும், பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் மகிமையும் ராஜரிகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும். (தானி 7:13-14; தானி 18; தானி 27)

2. இதோ, கர்த்தருடைய நாள் வருகிறது, உன்னில் கொள்ளையானது உன் நடுவிலே பங்கிடப்படும்.........என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லாப் பரிசுத்தவான்களும் வருவார்கள். (சக 14:1-5,

கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார்; அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும். (சக 14:9)

எருசலேமுக்கு விரோதமாக வந்திருந்த எல்லா ஜாதிகளிலும் மீதியான யாவரும் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுது கொள்ளும்படிக்கும், கூடாரப் பண்டிகையை ஆசரிக்கும்படிக்கும், வருஷாவருஷம் வருவார்கள்.........அந்நாள்முதல் சேனைகளுடைய கர்த்தரின் ஆலயத்திலே யாதொரு கானானியனும் இருப்பதில்லை. (சக 14:16-21)

3. அந்நாட்களின் உபத்திரவம் முடிந்தவுடனே, சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப் படும்.........வானத்தின் ஒருமுனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள். (மத் 24:29-31).

4. அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமைபொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார்.........அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார். (மத் 25:31-46).

5. தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு,

6. கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்.......... அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமைபொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். (2தெச 1:7-10)

நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம் பண்ணுவார். (2தெச 2:8).

7. எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான். (யூதா 1:14-15).

2 அதிகாரம்

8. இதோ, மேகங்களுடனே வருகிறார்; கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள்; பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள். அப்படியே ஆகும், ஆமென். (வெளி 1:7) (1தெச 19:11-21; 1தெச 20:1-3; ஏசா 63:1-6; யோவே 3).

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

3 அதிகாரம்

VI. சபையைக் குறித்து பவுலின் கரிசனை

1. தீமோத்தேயுவின் ஊழியம்

1தெச 3:1 ஆகையால், நாங்கள் இனிப் பொறுத்திருக்கக்கூடாமல், அத்தேனே பட்டணத்தில் தனித்துவிடப்படுகிறது நன்மையென்று நினைத்து,

1தெச 3:2 இந்த உபத்திரவங்களினாலே ஒருவனும் அசைக்கப்படாதபடிக்கு உங்களைத் திடப்படுத்தவும், உங்கள் விசுவாசத்தை பற்றிய உங்களுக்குப் புத்திசொல்லவும், நம்முடைய சகோதரனும் தேவ ஊழியக்காரனும் கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் எங்கள் உடன் வேலையாளுமாகிய தீமோத்தேயுவை அனுப்பினோம்.

1தெச 3:3 இப்படிப்பட்ட உபத்திரவங்களைச் சகிக்க நாம் நியமிக்கப்பட்டிருக்கிறோமென்று நீங்கள் அறிந்திருக்கிறீர்களே.

1தெச 3:4 நமக்கு உபத்திரவம் வருமென்று நாங்கள் உங்களிடத்திருந்த போது, உங்களுக்கு முன்னறிவித்தோம்; அப்படியே வந்து நேரிட்டதென்றும் அறிந்திருக்கிறீர்கள்.

1தெச 3:5 ஆகையால், நான் இனிப் பொறுத்திருக்ககூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக் காரன் உங்களைச் சோதனைக்குட் படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன்.

"நாங்கள் இனிப் பொறுத்திருக்கக் கூடாமல்" - தெசலோனிக்கேயில் உள்ள விசுவாசிகள் எவ்வாறு இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதில் பவுல் மிகுந்த ஆவலாக இருந்தார். ஏனெனில் அவர்கள் உபத்திரவங்களின் நடுவே கடந்து வந்தார்கள். அவர்களுடைய நன்மையை அறிந்து கொள்வதில் பவுல் இனிமேலும் தாமதிக்க விரும்பவில்லை. ஆகையினால் தீமோத்தேயுவை பவுல் அவர்களிடத்தில் அனுப்பினார். (1தெச 3:1-5).

உடன் வேலையாள் **(fellowlabourer)** - **συνεργός** - **synergos** - 4904

பெயரடை - உடன் வேலைசெய்யும், உடன் வேலையாளான, சகாயரான (பிலி 4:3)

உபத்திரவம் **(afflictions)** - **θλῖψις** - **thlipsis** - 2347

பெண்பால் பெயர்ச்சொல் - உபத்திரவம், வருத்தம் (பிலி 4:14)

உபத்திரவம் **(tribulation)** - **θλίβω** - **thliboo** - 2346

வினைச்சொல் - இடுக்கு, நெருக்கு, உபத்திரவப்படு, ஆக்கினைசெய் (2கொரி 1:6)

"சோதனைக்குட் படுத்தினதுண்டோ" - சாத்தான் ஒரு சோதனைக்காரன். விசுவாசிகளைச் சோதனைக்குட் படுத்துவதற்கு அவன் பல உபாயங்களைப் பயன்படுத்துவான். அவனுடைய சோதனைகளிலிருந்து நாம் வெற்றி பெற்று வரவேண்டும். சாத்தானிடம் நாம் விவாதம் பண்ணவும் கூடாது. அவனுடைய இரக்கத்திற்காக அவனிடம் கெஞ்சவும் கூடாது. சாத்தானை நாம் எதிர்த்து நிற்கும்போது அவன் நம்மை விட்டு ஓடிப்போவான். (யாக் 4:7; 1பேதுரு 5:8-9; எபே 6:10-18; 2கொரி 10:4-7; 2கொரி 2:11)

"சோதனைக்காரன்" **(tempter, the devil)** - (மத் 4:1-3; லூக்கா 4:2).

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

3 அதிகாரம்

கிருபையைப் பற்றிய சத்தியம்

தன்னுடைய சுவிசேஷ வேலை வீணாய் போய்விடுமோ என்று பவுல் சந்தேகப்படுகிறார். ஏனெனில் சாத்தான் விசுவாசிகளைச் சோதனைக்குட்படுத்தி அவர்களைத் தோல்வியுறச் செய்வதற்கு வாய்ப்புள்ளது. தேவனுடைய கிருபையைப் பற்றி பவுலுக்கு நன்றாகத் தெரியும். சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்பவர்களிடத்தில் தேவகிருபை கிரியை செய்யாது. தேவனுடைய கிருபையை யாரும் தங்களுடைய சொந்த முயற்சியினால் பெற்றுக் கொள்ளவும் முடியாது. ஆனாலும் தேவகிருபையின் ஆசீர்வாதங்களை அனுபவிப்பதற்கு நாம் ஒருசில நிபந்தனைகளைக் கைக்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். தேவன் யாருக்கும் நிபந்தனையற்ற கிருபையைத் தருவதில்லை. சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதோருக்கும், தேவகிருபை வரும் என்று எதிர்பார்க்க முடியாது.

எல்லோரையும் இரட்சிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஆயினும் தேவனுடைய சப்தத்திற்குச் செவிகொடுத்து அவருடைய சுவிசேஷச் செய்திக்குக் கீழ்ப்படிவோரை மட்டுமே தேவன் தமது கிருபையினால் இரட்சிக்கிறார். (ரோமர் 2:11). தேவனுடைய பரிசுத்தவான்கள் வெளிச்சத்தில் நடந்து சுவிசேஷத்திற்கு உண்மையாய் நடந்து கொள்ளும்போது மட்டுமே தேவகிருபை அவர்களுக்குப் பெலன் செய்கிறது. (1யோவான் 1:7) தேவன் கிருபையுள்ளவர். அவருடைய கிருபையைப் பெற்றுக் கொள்வதற்கு அவர் எதிர்பார்க்கும் நிபந்தனைகளை நிறைவேற்றுவது நமக்கு நியமிக்கப் பட்டிருக்கிறது. (தீத்து 2:11-12).

கிருபை (grace) - χάρις - charis - 5485

பெயர்ச்சொல் - கிருபை, ஆதாயம், ஈவு, நன்மை, நன்றி, ஆசீர்வாதம்

கிருபையைப் பெற்றிருப்போரின் சுபாவங்கள்

1. ஒருசிலர் தேவனுடைய கிருபையை விருதாவாய் பெற்றிருக்கிறார்கள். (2கொரி 6:1).
2. ஒருசிலர் தேவனுடைய கிருபையை விருதாவாக்குகிறார்கள். (கலா 2:21).
3. ஒருசிலர் கிருபையிலிருந்து விழுந்து விடுகிறார்கள். (கலா 1:6-8; கலா 5:4).
4. ஒருசிலர் தேவனுடைய கிருபையை இழந்து போகிறார்கள். (எபி 12:15).
5. ஒருசிலர் தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்திற்கு ஏதுவாகப் புரட்டுகிறார்கள். (யூதா 1:4).
6. கிருபை பெருகும்படிக்கு ஒருசிலர் பாவத்தில் நிலைநிற்கிறார்கள். (ரோமர் 6:1).
7. ஒருசிலர் தேவனுடைய கிருபையில் நிலை கொண்டிருக்கிறார்கள். வேறுசிலரோ நிலைகொண்டிராமல் இருக்கிறார்கள். (அப் 13:43).
8. ஒருசிலர் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்து கொடுத்து உதவி செய்கிறார்கள். (1பேதுரு 4:10).
9. இயேசு கிறிஸ்துவின் கிருபையில் ஒருசிலர் வளருகிறார்கள். ஒருசிலர் வளரவில்லை. (2பேதுரு 3:18).
10. ஒருசிலர் கிருபையை ஏற்றுக் கொள்கிறார்கள். ஒருசிலர் கிருபையைப் புறக்கணித்துத் தள்ளிவிடுகிறார்கள். (யோவான் 3:16; வெளி 22:17; எபி 12:15; யாக் 4:6).

தேவனுடைய கிருபை செய்யக்கூடிய காரியங்கள்

1. தேவகிருபை உலகத்தை இரட்சிக்கும். (ஆதி 6:8; எபே 2:8-9).
2. தேவகிருபை மனுஷருக்கு எல்லா நல்ல ஈவுகளையும் தரும். (சங் 84:11).

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

3 அதிகாரம்

3. தேவகிருபை மனுஷரை மனந்திருந்த வைக்கும். (சக 12:10).
4. தேவகிருபை மேலான ஆசீர்வாதங்களைத் தரும். (அப் 4:33)
5. தேவகிருபை இரட்சிப்பைத் தரும். (தீத்து 2:11-12; எபே 2).
6. கிருபை விசுவாசத்தைத் தரும். (அப் 18:28).
7. கிருபையினாலே நீதிமான்களாக்கப் படுகிறோம். (ரோமர் 3:24-25; தீத்து 3:6).
8. கிருபை பாவத்தை மேற்கொள்ளும். (ரோமர் 5:20).
9. கிருபை நீதியினாலே நித்திய ஜீவனுக்கு ஏதுவாக ஆட்கொள்ளும். (ரோமர் 5:21).
10. தேவகிருபை ஒருவனைத் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவனாக ஆக்கும். (ரோமர் 11:5-6)
11. கிருபை தைரியத்தைத் தரும். (ரோமர் 15:15).
12. கிருபை கிறிஸ்துவில் பங்குபெற வைக்கும். (1கொரி 10:30).
13. கிருபை வல்லமையைத் தரும். (1கொரி 15:10).
14. கிருபை உதாரத்துவமாக ஏவும். (2கொரி 8:1-2,6-9; 2கொரி 9:8).
15. கிருபை நீடிய பொறுமையைத் தரும். (2கொரி 12:9).
16. கிருபை ஜனங்களை ஊழியம் செய்வதற்கு அழைக்கும். (கலா 1:15)
17. கிருபையினால் ஐசுவரியம் பெருகும். (எபே 2:7).
18. கிருபை துதித்துப் பாடுவதற்கு ஏவும். (கொலோ 3:16)
19. கிருபையினால் ஒருவருடைய பேச்சு சாரமாக்கப்படும். (கொலோ 4:6)
20. கிருபை பெலனைத் தரும். (2தீமோ 2:1)
21. கிருபை உபதேசிக்கும். (தீத்து 2:11-12).
22. கிருபை பாடுகளை அனுபவிக்கும்போது உதவி செய்யும். (எபி 2:9).
23. கிருபை தேவைப்படும்போது உதவி புரியும். (எபி 4:16)
24. கிருபை ஸ்திரத்தன்மையைத் தரும். (எபி 13:9).
25. கிருபை ஜீவனைத் தரும். (1பேதுரு 3:7)
26. கிருபை தேவனுக்குப் பிரியமான ஆராதனை செய்ய உதவி புரியும். (எபி 12:28)
27. கிருபை பரிபூரணமாகப் பெருகும். (1தீமோ 1:14).
28. கிருபை நம்பிக்கையைத் தரும். (2தெச 2:16).
29. கிருபை பிரசங்கம் பண்ணும் ஆற்றலைத் தரும். (எபே 3:8).
30. கிருபை ஜீவியங்களை மாற்றும். (1கொரி 15:10)

தேவனுடைய கிருபை இருந்தபோதிலும் நாம் கவனமாக இருக்க வேண்டிய காரியங்கள்

1. இப்போது இரட்சிக்கப்பட்டிருக்கிற நாம் வருங்காலத்தில் பாவம் செய்தால் நமக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டு. (யோவான் 5:14; யோவான் 8:34; ரோமர் 6:1-23; ரோமர் 8:12-13; கலா 5:21; 2கொரி 5:10)

3 அதிகாரம்

2. நாம் பெற்றிருக்கிற இரட்சிப்பைக் காத்துக் கொள்வதற்கு ஒவ்வொரு நாளும் இரட்சிப்பின் நிபந்தனைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். (1யோவான் 1:7; ரோமர் 6:1-23; ரோமர் 8:1-13; யாக் 5:19-20; கலா 5:19-21; கொலோ 1:23; கொலோ 2:6-7)

3. நமக்குச் சுயாதீனச் சித்தம் இருக்கிறது. (கொலோ 1:23; 1யோவான் 1:7; ரோமர் 6:16-23; வெளி 22:17)

4. நாம் பாவம் செய்யும்போது நாம் பாவத்தில் விழுகிறோம். (ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கலா 6:7-8; யாக் 5:19-20; எபி 6:4-6; எபி 10:26-29; 2பேதுரு 2:20-21)

5. இரட்சிக்கப்பட்டவர்கள் பிரமாணத்தை மீறி பாவம் செய்யும்போது அவர்களுக்கு மரண ஆக்கினைத் தீர்ப்பு உண்டு. (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; எபி 10:26-29; யாக் 5:19-20; எசே 18:4,20-24; எசே 33:12-13,18)

6. பாவம் செய்கிற ஆத்துமா சாகவே சாகும். (எசே 18:4; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; கலா 5:19-21; கலா 6:7-8; 1கொரி 6:9-11; வெளி 21:8)

7. நமது பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு நாம் தேவனிடம் நமது பாவங்களைக் குறித்து அறிக்கை செய்ய வேண்டும். (1யோவான் 1:7,9; வெளி 2:5,16; வெளி 3:19; லூக்கா 13:1-5; அப் 2:38)

8. அறிக்கை செய்யப்பட்ட பாவங்கள் மட்டுமே மன்னிக்கப்படும். (1யோவான் 1:9; வெளி 2:5,16,22; வெளி 3:19; லூக்கா 13:1-5; அப் 2:38; மாற்கு 6:12; ரோமர் 2:4-6; 2கொரி 7:10)

9. பாவத்தைக் குறித்து மனுஷருக்குப் பொறுப்புண்டு. (ரோமர் 14:10; 2கொரி 5:10; கலா 5:19-21; கலா 6:7-8; ரோமர் 14:12)

10. ஒருவன் பின்வாங்கிப்போகும்போது அவனுடைய பின்மாற்றத்திற்கு அவனே பொறுப்பேற்க வேண்டும். (1தீமோ 2:4; 2பேதுரு 3:9; வெளி 2:5; வெளி 3:2; யாக் 5:19-20; கலா 5:19-21)

11. நாம் வருங்காலத்தில் பாவம் செய்தால் அப்போது அந்தப் பாவத்தையும் அறிக்கை செய்ய வேண்டும். இரட்சிக்கப்பட்டவர்கள் பாவமே செய்ய மாட்டார்கள் என்று கூறமுடியாது. (1யோவான் 1:7,9; வெளி 2:5,22; வெளி 3:2,யாக் 5:19-20)

12. அறிக்கை செய்யப்படாத பாவங்களைத் தேவன் மன்னிப்பதில்லை. (2நாளா 7:14; 2கொரி 7:9-10; 1யோவான் 1:9; 2தீமோ 2:25; வெளி 2:5; வெளி 3:2)

13. மனிதன் பாவம் செய்ய வேண்டுமென்று சித்தம் கொள்ளும்போது தேவன் அவனைக் கட்டிப்போடுவதில்லை.(ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; 1யோவான் 1:7; எபி 6:4-9; எபி 10:26-29)

14. தேவனுக்குக் கீழ்ப்படிய மறுப்போருக்கு நித்திய ஜீவன் வாக்குப்பண்ணப் படவில்லை. (யாக் 5:19-20; 2கொரி 3:16-17; 2கொரி 6:19-20; 2கொரி 9:27; எசே 33:12-20)

15. நாம் தேவனுக்குச் சுயாதீனமாகக் கீழ்ப்படிய வேண்டும். (வெளி 22:17; யோவான் 3:16-20; ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 1:6-8; கலா 5:4; கலா 6:7-8; 1யோவான் 1:7)

16. இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரேபேறான குமாரன். விசுவாசிகளாகிய நாம் தேவனுடைய பிள்ளைகள். (யோவான் 1:14,18; யோவான் 3:16)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

3 அதிகாரம்

17. ஒருவன் தொடர்ந்து பாவம் செய்யும்போது தேவன் அவனை ஆசீர்வதிப்பதில்லை. (எசே 18:4; ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 5:19-21; யாக் 5:19-20)

18. இரட்சிக்கப்படாதவர்கள் பாவம் செய்தாலும் இரட்சிக்கப்பட்டவர்கள் பாவம் செய்தாலும் பாவம் பாவமே. பாவத்தில் பட்சபாதமில்லை. (ரோமர் 6:16 -23; ரோமர் 8:12-13; 2கொரி 6:9-11; கலா 5:19-21; கொலோ 1:5-10; 2பேதுரு 2:20-22)

19. பாவிகளாக இருந்தாலும் பரிசுத்தவான்களாக இருந்தாலும் அவர்கள் செய்யும் பாவங்களுக்காக தேவன் அவர்களை ஆக்கினைக் குள்ளாகத் தீர்ப்பார். (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; ரோமர் 14:10-12; கலா 5:19-21; கலா 6:7-8; எசே 18:4,24-28; எசே 33:12-16; வெளி 2:5,16,22; வெளி 3:2)

20. பாவம் செய்யாமல் நீதிநெறிப் பிரகாரம் ஜீவிக்க வேண்டுமென்று மனுஷன் தன்னுடைய சுயாதீனச் சித்தத்தினால் தீர்மானம் பண்ணிக் கொள்ள வேண்டும். (யோவான் 3:16-20; யோவான் 7:17; யோவான் 8:34; 2பேதுரு 3:9; வெளி 22:17)

21. சாத்தானையும் பாவத்தையும் சேவிப்பவர்களுக்குத் தேவன் நித்திய ஜீவனைக் கொடுப்பதில்லை. (மத் 6:24; ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; கலா 5:19-21; கலா 6:7-8; 1யோவான் 3:8)

22. ஒருவன் வேண்டுமென்றே பாவம் செய்யும்போது அவன் தன்னுடைய நீதிநெறி வாழ்வில் விழுந்து விடுகிறான். (ரோமர் 6:16-23; ரோமர் 8:1-13; எபி 6:4-9; எபி 10:26-29; எசே 33:12-20)

23. தேவனுடைய கிருபையை மனுஷன் தன்னுடைய சுய இஷ்டப்படி பயன்படுத்த முடியாது. (ரோமர் 1:16; 1யோவான் 1:7; எபி 3:6,12-14; எபி 10:26-29)

24. விதைப்பும் அறுப்பும் என்னும் பிரமாணத்தைத் தேவனுடைய கிருபை ஆதரிக்கிறது. (கலா 6:7-8; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; எசே 18:4,24-28; எசே 33:12-16; வெளி 2:5-22)

25. தேவனுடைய சிலாக்கியங்கள் நிபந்தனைகளுக்குட் பட்டவை. (2கொரி 6:1; கலா 1:6-8; கலா 2:21; கலா 5:4; எபி 12:15; யாக் 5:19-20)

26. தேவன் நியமித்துள்ள நியதிகளுக்குக் கீழ்ப்படியாமல் தேவ ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது. (ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; கலா 5:19-21; கலா 6:7-8; யாக் 5:19-20; எபி 10:26-29; யோவான் 6:27)

27. தேவன் நியமித்துள்ள நியதிகளுக்குக் கீழ்ப்படியாமல் பாவமில்லாமல் ஜீவிக்க முடியாது. (1கொரி 3:16-17; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; கலா 5:16-26; கலா 6:7-8; எபி 6:1-9; எபி 10:26-29; எபி 12:14-15)

28. தேவனுடைய ராஜ்ஜியத்தில் தேவனே ராஜாதி ராஜாவாகவும், கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். (ஆதி 2:17; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; 1கொரி 6:9-11; கலா 5:19-21; கலா 6:7-8)

29. கலகக்காரர்களையும், முரட்டாட்டக் காரர்களையும் தேவன் ஆதரிப்பதில்லை. (எசே 18:4; ரோமர் 6:23; ரோமர் 8:12-13; கலா 6:7-8)

30. ஒருவன் கலகம் செய்து பாவத்தில் தொடர்ந்து விழுந்திருக்கும்போது தேவன் அவனுக்கு மன்னிப்பையும், நித்திய ஜீவனையும் வாக்குப் பண்ணவில்லை. (யாத் 32:32-33; எசே 18:4; எசே 33:10-20; ரோமர் 6:16-23; ரோமர் 8:12-13; கலா 5:19-21; கலா 6:7-8)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

3 அதிகாரம்

2. தீமோத்தேயு பவுலிடம் அறிவித்தது

1தெச 3:6 இப்பொழுது தீமோத்தேயு உங்களிடத்திலிருந்து எங்களிடத்தில் வந்து, உங்கள் விசுவாசத்தையும், அன்பையும் குறித்தும், நீங்கள் எப்பொழுதும் எங்களைப் பட்சமாய் நினைத்துக் கொண்டு, நாங்கள் உங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறது போல நீங்களும் எங்களைக் காண வாஞ்சையாயிருக்கிறீர்கள் என்பதைக் குறித்தும், எங்களுக்கு நற்செய்தி சொன்னதினாலே,

"எங்களுக்கு நற்செய்தி சொன்னதினாலே" - பொதுவாக நற்செய்தி சொல்வது என்பது சுவிசேஷச் செய்தியை அறிவிப்பதையே குறிக்கும். ஆனால் இந்த வசனத்திலும், லூக்கா 1:19 ஆவது வசனத்திலும் நற்செய்தி சொல்வது என்பது சாதாரணமான நல்ல செய்தியைக் கூறுவதைக் குறிக்கிறது. (மத் 24:14) தெசலோனிக்கேயருடைய விசுவாசம், அன்பு, பவுல்மீது அவர்கள் வைத்திருக்கும் கரிசனை ஆகியவையே இங்கு கூறப்பட்டிருக்கும் நற்செய்தியாகும்.

3. பவுலின் ஜெபமும் அவர்கள் விசுவாசத்தில் பரிபூரணம் அடைய வேண்டும் என்னும் வாஞ்சையும்

1தெச 3:7 சகோதரரே, எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம்.

1தெச 3:8 நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம்.

1தெச 3:9 மேலும், நம்முடைய தேவனுக்கு முன்பாக நாங்கள் உங்களைக்குறித்து அடைந்திருக்கிற மிகுந்த சந்தோஷத்திற்காக, நாங்கள் தேவனுக்கு எவ்விதமாய் ஸ்தோத்திரம் செலுத்துவோம்?

1தெச 3:10 உங்கள் முகத்தைக் கண்டு, உங்கள் விசுவாசத்தின் குறைவுகளை நிறைவாக்கும்பொருட்டு, இரவும் பகலும் மிகவும் வேண்டிக் கொள்ளுகிறோமே.

1தெச 3:11 நம்முடைய பிதாவாகிய தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் உங்களிடத்திற்கு எங்களை நேராக வழிநடத்துவாராக.

1தெச 3:12 நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து,

1தெச 3:13 இவ்விதமாய் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர் களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக.

"நீங்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்தால் நாங்கள் பிழைத்திருப்போம்" - நாம் பிழைத்திருப்பதற்கு நாமும் கர்த்தருக்குள் நிலைத்திருக்க வேண்டும். (எபி 3:6,12-14)

நிறைவாக்கு (perfect) - καταρτίζω - katartizoo - 2675

வினைச்சொல் - பழுதுபார், உண்டாகும்படி செய், தேறியிரு, எத்தனமாக்கு, சீர்பொருந்தியிரு, நிறைவாக்கு, ஆயத்தம்பண்ணு, சீர்படுத்து (arrange; adjust) (2கொரி 13:5)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

3 அதிகாரம்

"நம்முடைய பிதாவாகிய தேவனும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும்" - பிதாவாகிய தேவனும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவும் தனித்தனியாக வெவ்வேறு ஆள்தத்துவப் பண்புடையவர்கள் என்பதை இந்த வசனம் விளக்குகிறது. கிறிஸ்துவின் கர்த்தத்துவத்தையும், இந்த வாக்கியம் வலியுறுத்துகிறது. (1யோவான் 5:7)

தீர்க்கதரிசன எண் - 3

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது" (1தெச 3:13) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. மத்திய ஆகாயத்தில் தம்முடைய பரிசுத்தவான்களைச் சந்திப்பதற்காக இயேசு கிறிஸ்து வருவார். (1தெச 4:16) இந்த நிகழ்ச்சி சபை எடுத்துக் கொள்ளப்படுதல் என்னப் படுகிறது. பிதாவாகிய தேவனுக்கு முன்பாக இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களை அழைத்து வருவார். தேவன் அவர்களைக் கறைதிரையில்லாமல் பரிசுத்தப்படுத்துவார். அதுவரையிலும் இரட்சிப்பும், நித்திய ஜீவனும் மனுஷருக்கு நிபந்தனையின் பேரிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. (யோவான் 6:27) சபை எடுத்துக் கொள்ளப்படும்போது மனுஷர் கறைதிரையில்லாத பரிசுத்த ஜீவனைப் பெற்றுக் கொள்கிறார்கள். தேவனுடைய வாக்குத்தத்தம் இவர்களுக்கு நிறைவேறுகிறது. (மத் 7:13-14; மத் 18:8-9; மத் 19:28-29; மாற்கு 10:29-30; லூக்கா 18:29-30; ரோமர் 2:7; ரோமர் 6:21-23; கலா 6:7-8; 1தீமோ 1:16; 1தீமோ 4:8; 1தீமோ 6:12,19; தீத்து 1:2; தீத்து 3:7; 1பேதுரு 1:5,9,13; 1பேதுரு 3:7; 1யோவான் 2:25; யூதா 1:20-24; தானி 12:2; யோவான் 6:27)

பிழையற்றது **(unblameable)** - **ἄμεμπτος - amemptos** - 273

பெயரடை - குற்றமற்ற, பிழையற்ற, குற்றம் சாட்டப்படாத, பிழையில்லாத (பிலி 2:15)

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது" - சக 14:5; யூதா 1:14 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் நிகழ்ச்சியை இது குறிப்பிடவில்லை. இந்த வசனங்களில் இயேசு கிறிஸ்து தம்முடைய பரிசுத்தவான்களோடு பூமிக்கு ஆளுகை செய்வது பற்றி கூறப்பட்டிருக்கிறது. இது இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்னப்படுகிறது. (2தெச 2:7) மத்திய ஆகாயத்தில் தம்முடைய பரிசுத்தவான்களைச் சந்தித்து அவர்களைப் பரலோகத்திலுள்ள பிதாவிடம் அழைத்து வருவதை 1தெச 3:13 ஆவது வசனம் குறிப்பிடுகிறது. (1தெச 4:16-17; யோவான் 13:1-3).

4 அதிகாரம்

VII. விசுவாசிகள் நடக்க வேண்டிய விதமும் ஆனந்தபாக்கிய நம்பிக்கையும்

1. தேவனைப் பிரியப்படுத்தி பக்தியுடன் நடக்க வேண்டும் என்னும் புத்திமதி

1தெச 4:1 அன்றியும், சகோதரரே, நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று, நீங்கள் எங்களால் கேட்டு ஏற்றுக் கொண்டபடியே, அதிகமதிகமாய்த் தேறும்படிக்கு, கர்த்தராகிய இயேசுவுக்குள் உங்களை வேண்டிக் கொண்டு புத்திசொல்லுகிறோம்.

1தெச 4:2 கர்த்தராகிய இயேசுவினாலே நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை அறிந்திருக்கிறீர்களே.

"நீங்கள் இன்னின்ன பிரகாரமாய் நடக்கவும், தேவனுக்குப் பிரியமாயிருக்கவும் வேண்டுமென்று" - விசுவாசிகள் கிறிஸ்துவிற்குள் பரிபூரணமாக இருக்க வேண்டும் என்று பவுல் எப்போதும் ஆர்வமுடையவராக இருக்கிறார். (1தெச 2:7,11-12; 1தெச 3:10,13; 1தெச 4:1-7; 1தெச 5:12-23)

2. உண்மையான பரிசுத்தமாதல் - (1கொரி 1:30; 2கொரி 6:14-18; 7:1; எபி 12:14)

1தெச 4:3 நீங்கள் பரிசுத்த முள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து,

1தெச 4:4 தேவனை அறியாத அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்குட்படாமல்,

1தெச 4:5 உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டு கொள்ளும்படி அறிந்து;

1தெச 4:6 இந்த விஷயத்தில் ஒருவனும் மீறாமலும் தன்சகோதரனை வஞ்சியாமலும் இருக்கவேண்டும்; முன்னமே நாங்கள் உங்களுக்குச் சொல்லி, சாட்சியாக எச்சரித்தபடியே இப்படிப்பட்ட விஷயங்களெல்லாவற்றையுங் குறித்துக் கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவராயிருக்கிறார்.

1தெச 4:7 தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.

தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு செய்ய வேண்டிய காரியங்கள் (1தெச 4:3-18)

1. வேசி மார்க்கத்திற்கு விலகியிருக்க வேண்டும். (1தெச 4:3; மத் 5:32)
2. அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும், கனமாயும் ஆண்டு கொள்ள வேண்டும். (1தெச 4:5).
3. அஞ்ஞானிகளைப் போல மோக இச்சைக்கு உட்படக்கூடாது. (1தெச 4:4; கொலோ 3:5)
4. ஒருவனும் தன் சகோதரனை வஞ்சிக்கக்கூடாது. (1தெச 4:6,7).
5. பரிசுத்தமாக நடந்து கொள்ள வேண்டும். (1தெச 4:7; ரோமர் 1:24)
6. தேவனை அசட்டை பண்ணக்கூடாது. (1தெச 4:8).
7. ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டும். (1தெச 4:9; 1கொரி 13)
8. அன்பிலே அதிகமாய்ப் பெருக வேண்டும். (1தெச 4:10; 1தெச 3:12)
9. அமைதலுள்ளவர்களாய் இருக்கும்படி நாடவேண்டும். (1தெச 4:12; 2தீமோ 2:15).

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

4 அதிகாரம்

10. ஒவ்வொருவனும் தனது சொந்த அலுவல்களைப் பார்க்க வேண்டும். (1தெச 4:12).

11. ஒவ்வொருவனும் தனது சொந்த கைகளினால் வேலை செய்ய வேண்டும். (1தெச 4:12; 1கொரி 4:12; எபே 4:28; 2தெச 3:10)

12. மனுஷருக்கு முன்பாக யோக்கியமாய் நடக்க வேண்டும். (1தெச 4:11).

13. நம்பிக்கையுள்ளவர்களாக இருக்க வேண்டும். (1தெச 4:13-17).

14. ஒருவரையொருவர் தேற்ற வேண்டும். (1தெச 4:18).

பரிசுத்தம் **(sanctification)** - **ἁγιασμός - hagiasmos** - 38

ஆண்பால் பெயர்ச்சொல் - பரிசுத்தம் **(consecration) "holiness"** (ரோமர் 6:19,22; 1தெச 4:7; 1தீமோ 2:15; எபி 12:14) **"sanctification"** (1கொரி 1:30; 1தெச 4:3-4; 2தெச 2:13; 1பேதுரு 1:2)

"தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து" - புருஷரும், (1தெச 4:3; 2கொரி 4:7; 2தீமோ 2:21) ஸ்திரீகளும் (1தெச 4:4; 1பேதுரு 3:7) தங்கள் சரீத்தைப் பரிசுத்தமாயும், கனமாயும் ஆளவேண்டும்.

3. அன்பில் பெருக வேண்டும் என்னும் கட்டளை - (1கொரி 13; 1யோவான் 3:11-18; 4:11-21)

1தெச 4:8 ஆகையால் அசட்டை பண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான்.

1தெச 4:9 சகோதர சிநேகத்தைக் குறித்து நான் உங்களுக்கு எழுத வேண்டுவதில்லை; நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும் படிக்கு தேவனால் போதிக்கப் பட்டவர்களாயிருக்கிறீர்களே.

1தெச 4:10 அந்தப்படி நீங்கள் மக்கெதோனியா நாடெங்கும் உள்ள சகோதரரெல்லாருக்கும் செய்துவருகிறீர்கள். சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும்.

"தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான்" - மனுஷர் செய்யும் பாவங்களில் சில தேவனுக்கு நேர் விரோதமானவை. கொலைபண்ணுதல் (ஆதி 9:6), விசுவாசியை வஞ்சித்தல் (மத் 18:10; லூக்கா 10:16; 1தெச 4:8), மனுஷரை அவமானப்படுத்துதல் (மத் 25:31-46), இயேசு கிறிஸ்துவையும், சுவிசேஷத்தையும் ஏற்றுக் கொள்ளாமல் மறுதலித்தல் (யோவான் 12:48).

"தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவன்" - ஒவ்வொரு விசுவாசியும் மறுபடியும் பிறக்கும்போது அவரிடத்தில் பரிசுத்த ஆவியானவர் ஓரளவு இருக்கிறார். (ரோமர் 8:14-16; கலா 4:6). கிறிஸ்துவின் ஆவி இல்லாதவன் அவருடையவன் அல்ல. (ரோமர் 8:9) பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் என்பது தேவனுடைய ஆவியின் நிறைவைப் பெற்றுக் கொள்வதாகும். (யோவான் 3:34; அப் 1:4-8; அப் 2:4)

சகோதரசிநேகம் **(brotherly love)** - **φιλαδελφία - philadelphia** - 5360

பெண்பால் பெயர்ச்சொல் - சகோதரசிநேகம் **(brotherly, sisterly love) brotherly love** (1தெச 4:9; ரோமர் 12:10; எபி 13:1); **love of the brethren** (1பேதுரு 1:22); **brotherly kindness** (2பேதுரு 1:7) **Philadelphia** (வெளி 1:11; வெளி 3:7).

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

4 அதிகாரம்

போதிக்கப்படுதல் (taught) - **θεοδίδακτος** - **theodidaktos** - 2312

ஆண்பால் பெயர்ச்சொல் - தெய்வீகக் காரியங்களைப் பேசுபவர் - விசுவாசிகள் மத்தியில் தெய்வீக அன்பைப் போதிப்பது. (யோவான் 6:45). தேவன் தமது ஒரேபேறான குமாரனைத் தந்து, நம்மீதுள்ள தமது அன்பை வெளிப் படுத்தியிருக்கிறார். (யோவான் 3:16; 1யோவான் 3:1). நாம் பாவிகளாகவும், தேவனுக்குச் சத்துருக்களாகவும் இருக்கையில் தேவன் தமது அன்பை நம்மீது வெளிப்படுத்தியிருக்கிறார். (ரோமர் 5:5-10) தேவன் தம்முடைய சத்துருக்களிடத்தில் தமது அன்பை இவ்வளவாய் வெளிப்படுத்தியிருக்கும் போது நாமும் ஒருவரிடத்திலொருவர் அன்புகூர வேண்டும். (1யோவான் 3:11-23; 1யோவான் 4:7-21)

"சகோதரரே, அன்பிலே நீங்கள் இன்னும் அதிகமாய்ப் பெருகவும்" - சகோதர சிநேகத்தில் தெசலோனிக்கேய சபையார் இன்னும் அதிகமாய்ப் பெருக வேண்டும். (1தெச 3:12; 2கொரி 9:10).

4. யோக்கியமாய் நடந்து உலகத்தில் முன்மாதிரியாக ஜீவிக்க வேண்டும் - (ரோமர் 12:9-16; 1தீமோ 4:12-16)

1தெச 4:11 புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றிய யோக்கியமாய் நடந்து, ஒன்றிலும் உங்களுக்குக் குறைவில்லாதிருக்கும் படிக்கு,

1தெச 4:12 நாங்கள் உங்களுக்குக் கட்டளையிட்ட படியே, அமைதலுள்ளவர்களாயிருக்கும் படி நாடவும், உங்கள் சொந்த அலுவல்களைப் பார்க்கவும், உங்கள் சொந்தக் கைகளினாலே வேலைசெய்யவும் வேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறோம்.

நாடுதல் (study) - **φιλοτιμέομαι** - **philotimeomai** - 5389

வினைச்சொல் - நாடு (**to be ambitious; pursue eagerly; strive and aspire to; prize above measure**). "**study**" (1தெச 4:11); "**strive**" (ரோமர் 15:20); "**labour**" (2கொரி 5:9). இந்த வார்த்தையும், 2தீமோ 2:15 ஆவது வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தையும் ஒரே பொருளுடையது அல்ல.

அமைதியாயிரு (be quiet) - **ἡσυχάζω** - **heesychazoo** - 2270

வினைச்சொல் - பேசாமல் இரு, ஓய்ந்திரு, அமைதியாயிரு "**be quiet**" (1தெச 4:11); "**rest**" (லூக்கா 23:56); "**cease**" (அப் 21:14); "**hold one's peace**" (லூக்கா 14:4; அப் 11:18).

5. சபை எடுத்துக்கொள்ளப்படும் விதமும் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களும் - (லூக் 21:34-36; யோவான் 14:1-3; 1கொரி 15:23,51-58; 2கொரி 5:1-8; எபே 5:27; பிலி 3:11, 20-21; 1தெச 2:19; 3:13; 5:9,23; 2தெச 2:1, 7-8; கொலோ 3:4; யாக் 5:7-8; 1யோவான் 2:28; 3:2; 1பேதுரு 5:4; வெளி 1:19)

1தெச 4:13 அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை.

1தெச 4:14 இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டு வருவார்.

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

4 அதிகாரம்

1தெச 4:15 கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரை அயடைந்தவர்களுக்கு முந்திக் கொள்வதில்லை.

1தெச 4:16 ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.

1தெச 4:17 பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.

1தெச 4:18 ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.

தீர்க்கதரிசன எண் - 4

"சகோதரரே, நித்திரையடைந்தவர் களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை.................." (1தெச 4:13-5:10) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. (2கொரி 1:8)

1தெசலோனிக்கேயர் 4:14-17 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் வெளிப்பாடுகள்

1. இயேசு கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் பரலோகத்திலிருந்து அழைத்து வரப்படுவார்கள். அவர்களுக்கு உயிர்த்தெழுந்த சரீரங்கள் கொடுக்கப் படும். (1தெச 4:14; யோவான் 5:28-29; 1கொரி 15:20-23,35-58; பிலி 3:21).
2. இக்காலத்தில் கிறிஸ்துவிற்குள் உயிரோடு இருக்கிறவர்கள் மரிக்காமல் மறுரூபமடைவார்கள். (1தெச 4:15-17; 1கொரி 15:51-58; 2கொரி 5:1-10; பிலி 3:21).
3. இந்த நிகழ்ச்சி இயேசு கிறிஸ்து மத்திய ஆகாயத்திற்குத் தமது சபையை எடுத்துக் கொள்ள வரும் காரியமாகும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்பது இதற்குப்பின்பு நடைபெறும் நிகழ்ச்சியாகும். (1தெச 4:15-17; 2தெச 2:7, வெளி 4:1)
4. பரிசுத்தவான்களை மறுரூபப் படுத்துவதற்கு கர்த்தர் தாமே பரலோகத்திலிருந்து மத்திய ஆகாயத்திற்கு இறங்கி வருவார். (1தெச 4:16; யோவான் 14:1-3; 1கொரி 15:23,51-58; பிலி 3:21).
5. கிறிஸ்துவிற்குள் மரித்தவர்கள் கிறிஸ்துவிற்குள் ஜீவிக்கிறவர்களுக்கு முன்பாக எழுந்திருப்பார்கள். (1தெச 4:16; 1கொரி 15:23,51-58; பிலி 3:21; யோவான் 5:28-29).
6. சபையாரும் ஆபேல் முதல் இக்காலம் வரையிலும் கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர் அனைவரும் அநித்திய சரீரத்திலிருந்து நித்திய சரீரத்திற்கு மாற்றப்படுவார்கள். (1தெச 4:17; யோவான் 14:1-3; லூக்கா 21:36; 1கொரி 15:23,51-58; பிலி 3:21; 2கொரி 5:1-10; கொலோ 3:4; 2தெச 2:7, எபே 5:27).

கிறிஸ்தவருடைய நம்பிக்கைகள்

1. இரட்சிப்பு **(Salvation)** (ரோமர் 8:20-25; ரோமர் 15:4,13; 1தெச 5:8; 2தெச 2:16; 1பேதுரு 1)
2. நீதி **(Righteousness)** (கலா 5:5)
3. தேவனுடைய அழைப்பு **(God's calling)** (எபே 1:18; எபே 4:4)
4. நித்திய சுதந்தரம் **(Eternal inheritance)** (கொலோ 1:5; எபே 1:11-18; எபி 9:15; 1பேதுரு 1:4)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

4 அதிகாரம்

5. தேவனுடைய மகிமை **(God's glory)** (ரோமர் 5:1-5; கொலோ 1:27)

6. உயிர்த்தெழுதல் **(Resurrection)** (அப் 23:6; அப் 24:15; 1தெச 4:13; தீத்து 2:13; 1யோவான் 3:3)

7. நித்திய ஜீவன் **(Eternal life)** (1கொரி 13:13; 1கொரி 15:19; எபே 2:12; கொலோ 1:23; தீத்து 1:2; தீத்து 3:7; எபி 3:6; எபி 6:11,18,19; எபி 7:19; 1பேதுரு 1:3-13)

8. பரலோகத்தில் பாதுகாப்பாக இருப்பது **(Converts safe in heaven)** (1தெச 2:19)

"இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தார்" - இயேசு கிறிஸ்துவின் மரணம் அவரை விசுவாசிப்போருக்கு இரட்சிப்பின் நிச்சயத்தைத் தருகிறது. (மத் 26:28; ரோமர் 5:6-11; 1பேதுரு 2:24) அவருடைய உயிர்த்தெழுதல் எல்லா மனுஷருக்கும் உயிர்த்தெழுதலின் நிச்சயத்தைத் தருகிறது. (1தெச 5:10; யோவான் 14:19; ரோமர் 5:10; ரோமர் 6:5-8; 1கொரி 15:4-23; 2தீமோ 2:11).

"நித்திரையடைந்தவர்கள்" - நித்திரை என்பது சரீரத்தின் மரணத்தைக் குறிப்பிடும். (1தெச 4:14-16; 1தெச 5:10; உபா 31:16; 2சாமு 7:12; 1இராஜா 1:21; யோபு 7:21; சங் 13:3; தானி 12:2; மாற்கு 5:39; லூக்கா 8:52; யோவான் 11:11-14; அப் 13:36; 1கொரி 11:30; 1கொரி 15:51; யாக் 2:26). மேலே கூறப்பட்டிருக்கும் வசனங்களில் நித்திரை என்னும் வார்த்தை மரணத்தோடு தொடர்புபடுத்தியே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மத் 27:52; 1கொரி 15:20 ஆகிய வசனங்களில் "நித்திரையடைந்திருத்தல்" என்பது மரணத்தையே குறிக்கும். பழைய ஏற்பாட்டில் தன் பிதாக்களோடு நித்திரையடைந்தான் என்னும் வாக்கியம் மரணத்தைக் குறிக்கும் விதமாக 36 இடங்களில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. நித்திரை என்னும் வார்த்தை ஆத்துமாவின் நித்திரையைக் குறிப்பதில்லை. ஏனெனில் ஆத்துமா மரிக்காது. அது நித்தியமானது. (1பேதுரு 3:4) இந்த வசனத்தில் "இயேசுவிற்குள் நித்திரையடைந்தவர்கள்" என்னும் வாக்கியம் இயேசு கிறிஸ்துவில் மரித்தவர்கள் என்று பொருள்படும். (1தெச 4:14,16).

"தேவன் அவரோடேகூடக் கொண்டு வருவார்" - விசுவாசிகள் மரித்தவுடன் பரலோகத்திற்குச் சென்று விடுவார்கள். தங்களுடைய மரித்த சரீரங்களின் உயிர்த்தெழுதலுக்காக அவர்கள் பரலோகத்தில் காத்துக் கொண்டிருப்பார்கள். (2கொரி 5:8; பிலி 1:21-24; எபி 12:22-23; வெளி 6:9-11) இயேசு கிறிஸ்து பரலோகத்திலிருந்து மத்திய ஆகாயத்திற்கு இறங்கிவரும்போது, பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்களும், அவரோடே வருவார்கள். (1தெச 4:17) அப்போது அவர்களுடைய மரித்த சரீரங்கள் ஒருகணப்பொழுதிலே மறுரூபமாகி அவர்களுடைய ஆத்துமாக்களோடு மறுபடியும் இணைந்து கொள்ளும். (1கொரி 15:51-58).

"கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு" - கர்த்தருடைய வெளிப்பாட்டின் மூலமாக என்று பொருள். (கலா 1:12).

"கர்த்தருடைய வருகை" - சபையை எடுத்துக் கொள்வதற்காக இயேசு மத்திய ஆகாயத்தில் கிறிஸ்துவின் வருகையை இந்த வாக்கியம் குறிக்கும். (1தெச 4:17) இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை இந்த வாக்கியம் குறிப்பிடவில்லை. (சக 14; வெளி 19; மத் 24:29-31; மத் 25:31-46; யூதா 1:14)

முந்திக்கொள் **(prevent)** - **φθάνω** - **phthanoo** - 5348

வினைச்சொல் - வா, அடை, முந்திக்கொள், தேறியிரு **(to come before, first)** **prevent** (1தெச 4:15); **attain** (ரோமர் 9:31; பிலி 3:16); **come** (மத் 12:28; லூக்கா 11:20; 2கொரி 10:14; 1தெச 2:16). - ஏற்கெனவே மரித்த பரிசுத்தவான்கள் முதலாவது உயிர்த்தெழுவார்கள். அதன்பின்பு உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் மறுரூபமடைவார்கள். மத்திய ஆகாயத்தில் கர்த்தரைச் சந்திப்பதற்காக மரித்து உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும், உயிரோடிருந்து மறுரூபமான பரிசுத்தவான்களும் செல்வார்கள். (1தெச 4:16-17).

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

4 அதிகாரம்

ஆரவாரம் (shout) - κέλευσμα - **keleusma** - 2752

பால்வேறுபாடற்ற பெயர்ச்சொல் - ஆரவாரம் **(a cry of incitement; an order; command in war; the call of preparation for action)** - அப் 12:22 ஆவது வசனத்தில் "ஆர்ப்பரித்தார்கள்" என்னும் வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இதற்கான கிரேக்க வார்த்தையும், இந்த வசனத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கும் கிரேக்க வார்த்தையும் வெவ்வேறானவை. யோவான் 11:43 ஆவது வசனத்தில் "லாசருவே வெளியே வா" என்று இயேசு கிறிஸ்து உரத்த சத்தமாகக் கூப்பிட்டார். இது ஒரு கட்டளையாகும். பிரதான தூதனாகிய மிகாவேல் பிசாசுடனே "தர்க்கித்துப் பேசினான்" (யூதா 1:9). இஸ்ரவேல் ஜனங்கள் இடிமுழக்கங்களையும், மின்னல்களையும், மலை புகைகிறதையும் கண்டார்கள். (யாத் 20:18-19; எபி 12:18-21,26). இவ்வாறாக பல வசனங்களில் பலவிதமான ஆரவாரங்களையும், எக்காள சத்தங்களையும் குறித்து நாம் வாசிக்கிறோம்.

"தேவ எக்காளம்" **(trump of God)** - வெளி 11:15-13:18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் ஏழாவது எக்காளமும், இந்த எக்காளமும் வெவ்வேறானவை. தானியேலின் எழுபதாவது வாரத்திற்கு முன்பாக சபை எடுத்துக் கொள்ளப்படும்போது தேவஎக்காளம் தொனிக்கப்படுகிறது. (1தெச 4:16; 2தெச 2:7, வெளி 4:1) எழுபதாவது வாரத்தின் மத்தியில் ஆண்பிள்ளை எடுத்துக் கொள்ளப்படும் போது தேவஎக்காளம் தொனிக்கப்படுகிறது (வெளி 11:15-13:18). முதலாவது தேவ எக்காளமாகும். (1தெச 4:16) மற்றது ஏழாவது தூதனுடைய எக்காளமாகும். (வெளி 11:15). ஒரு நிமிஷப் பொழுதிலே ஒரு நிகழ்ச்சி நடைபெறப்போகிறது என்பதை தேவ எக்காளம் அறிவிக்கிறது. (1கொரி 15:51-58) ஏழாவது தூதனுடைய எக்காளம் பல நிகழ்ச்சிகளை அறிவிக்கிறது. (வெளி 10:7; வெளி 11:15-13:18). தேவ எக்காளம் ஆசீர்வாதமான எக்காளமாகும். (1தெச 4:16-17) ஏழாவது தூதனின் எக்காளம் மனுஷருக்கு அழிவை அறிவிக்கும் எக்காளமாகும் (வெளி 8:13; வெளி 11:15; வெளி 12:12). தேவ எக்காளம் வெளி 6:1-9:21 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் முதலாவது ஆறு எக்காளங்களுக்கும் ஏழாவது முத்திரைக்கும் முந்தியது. ஏழாவது தூதனின் எக்காளம் இவற்றிற்குப் பிந்தியது. (வெளி 11:15, 1கொரி 15:23)

சபை எடுத்துக் கொள்ளப்படுவதில் பங்கு பெறுவதற்கு நிபந்தனைகள்

1. இயேசுகிறிஸ்துவிற்குள் இருக்க வேண்டும். (1தெச 4:14,16; 2கொரி 5:17-18).
2. கிறிஸ்துவினுடையவர்களாக இருக்க வேண்டும். (1கொரி 15:23; கலா 5:24).
3. ஆசீர்வதிக்கப் பட்டவர்களாகவும், பரிசுத்தமானவர்களாகவும் இருக்க வேண்டும். (வெளி 20:4-6; எபி 12:14)
4. நன்மை செய்கிறவர்களாக இருக்க வேண்டும். (யோவான் 5:28-29).
5. பாத்திரராக இருக்க வேண்டும். (லூக்கா 21:36).
6. சபையைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். (1கொரி 12:13; எபே 1:20-23; எபே 4:4-6; எபே 5:27; கொலோ 1:18,24)
7. சுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டும். (1யோவான் 3:2-3).
8. கறைதிரையற்றவர்களாக இருக்க வேண்டும். (எபே 5:27)
9. ஆவியில் ஜீவித்து நடக்க வேண்டும். (கலா 5:19-21).
10. வெளிச்சத்தில் நடக்க வேண்டும். (1யோவான் 1:7; கொலோ 2:6).

"உயிரோடிருக்கும் நாமும்" - (2தெச 2:7, வெளி 4:1)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

4 அதிகாரம்

எடுத்துக்கொள்ளப்படுதல் **(caught up)** - ἁρπάζω - harpazoo - 726

வினைச்சொல் - இழு, பறித்துக்கொள், பிடித்துக்கொள், பீறு, எடுத்துக்கொள் **(to carry off; grasp hastily; snatch up; to seize and overpower; to plunder)** (யோவான் 10:28) - இந்த வார்த்தையிலிருந்துதான் சபை எடுத்துக் கொள்ளப்படுதல் என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (மத் 13:19; அப் 8:39; 2கொரி 12:2,4; 1தெச 4:17; வெளி 12:5)

"மேகங்கள் மேல்" - இந்த வாக்கியம் உண்மையான மேகங்களைக் குறிப்பிடும். மேகங்கள் என்பது ஜனத்திரளைக் குறிப்பதாக ஒருசிலர் வியாக்கியானம் பண்ணுகிறார்கள். இந்த வியாக்கியானத்தைவிட மேகங்கள் என்பதை மெய்யான மேகங்கள் என்று கூறுவதே சிறந்தது.

சபை எடுத்துக் கொள்ளப்படுவதன் நோக்கங்கள்

1. தாம் வாக்குத்தத்தம் பண்ணிய பிரகாரம் தம்முடனேகூட இருப்பதற்காக (1தெச 4:17; யோவான் 14:1-3; எபே 5:27)
2. மரித்த துன்மார்க்கரிலிருந்து வேறுபிரித்து இயேசு கிறிஸ்துவிற்குள் நித்திரையடைந்தவர்களை உயிரோடு எழுப்புவதற்காக. (1தெச 4:14, 16-17; பிலி 3:11; வெளி 20:4-6)
3. புதிய எருசலேமிலே கர்த்தருடனேகூட நித்திய காலமாக இருப்பதற்கும் வெகுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் கர்த்தர் தம்முடைய பரிசுத்தவான்களைப் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்வதற்காக. (1தெச 4:17; 1தெச 3:13; யோவான் 14:1-3; 2கொரி 5:10; எபி 12:22-23; வெளி 19:1-10; வெளி 21:9-10)
4. பரிசுத்தவான்களின் அழிவுள்ள சரீரங்களை அழியாத சரீரங்களாக மாற்றுவதற்காக. (1தெச 4:16-17; 1கொரி 15:35-58; பிலி 3:21)
5. தேவனுக்கு முன்பாக பரிசுத்தவான்களை நிறுத்துவதற்காக. (1தெச 4:17; 1தெச 3:13; யோவான் 14:1-3; யூதா 1:24; வெளி 19:1-10)
6. சரீரத்திலும், ஆத்துமாவிலும், ஆவியிலும் பரிசுத்தவான்களை முழுமையடையச் செய்வதற்காக. (1தெச 4:16-17; 1தெச 5:23; பிலி 3:21)
7. முன்மாரி, பின்மாரி ஆகியவற்றின் கனியைப் பெற்றுக் கொள்வதற்காக. (யாக் 5:7; யோவான் 14:1-3)
8. மகா உபத்திரவத்திலிருந்து பரிசுத்தவான்களைத் தப்பிக்க வைப்பதற்காக. (வெளி 6:1-19:21, 1தெச 4:16-17; 1தெச 5:9; லூக்கா 21:36; வெளி 4:1)
9. அக்கிரமக்காரனைத் தடை செய்கிறவனை நீக்குவதற்காக. (2தெச 2:7, வெளி 4:1)
10. அந்திக்கிறிஸ்துவின் வெளிப்பாட்டை அனுமதிப்பதற்காக. (2தெச 2:7, வெளி 4:1)

"எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" - உபத்திரவக்காலத்தில் பரிசுத்தவான்கள் கர்த்தருடனே பரலோகத்தில் இருப்பார்கள். (2தெச 2:7, வெளி 4:1) அர்மெகதோனுக்கு இயேசு கிறிஸ்துவோடு சேர்ந்து வருவார்கள். (சக 14:1-5; மத் 24:29-31; மத் 25:31-46; யூதா 1:14; வெளி 19:11-21) பரிசுத்தவான்கள் பரலோகத்தில் புதிய எருசலேமில் ஜீவிப்பார்கள். ஆயிரம் வருஷ அரசாட்சியில் இயேசு கிறிஸ்துவோடு பூமியில் ஆளுகை செய்வார்கள். (வெளி 20:4-10; வெளி 21:9-10; எபி 12:22-23) இதன் பின்பு புதிய எருசலேமிலிருந்து புதிய பூமிக்கு நித்திய காலமாக ஜீவிக்க வருவார்கள். (வெளி 21, வெளி 22).

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

5 அதிகாரம்

VIII. கர்த்தருடைய நாள் - (2தெச 2:2; 2பேதுரு 3:10)

1. கர்த்தருடைய நாளை எவ்வாறு தெரிந்து கொள்வது

1தெச 5:1 சகோதரரே, இவைகள் நடக்குங் காலங்களையும் சமயங்களையுங் குறித்து உங்களுக்கு எழுதவேண்டுவதில்லை.

1தெச 5:2 இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள்.

1தெச 5:3 சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை.

"இவைகள் நடக்குங் காலங்களையும் சமயங்களையுங்குறித்து" - சபை எடுத்துக் கொள்ளப்படும் நாளையும், கர்த்தருடைய நாளையும் இந்த வாக்கியம் குறிப்பிடுகிறது. (2தெச 2:7, வெளி 4:1)

"கர்த்தருடைய நாள்" (the day of the Lord) - கர்த்தருடைய நாள் என்பது ஆயிரம் வருஷ அரசாட்சியைக் குறிக்கும். இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலிருந்து ஆயிரம் வருஷ அரசாட்சியின் இறுதிப் பகுதியில் சாத்தான் கலகம் பண்ணும் காலம் வரையிலும் உள்ள நாட்கள் கர்த்தருடைய நாள் என்னப்படுகிறது. (வெளி 19:11-20:10) இந்தப் பூமியை ஆட்சி செய்வதற்கு கர்த்தர் வரும் வரையிலும் கர்த்தருடைய நாள் வராது. (ஏசா 2:12; ஏசா 13:6,9; ஏசா 34:8; ஏசா 61:2; ஏசா 63:1-6; எரே 46:10; எசே 30:3; தானி 2:44-45; தானி 7:13-14; ஆமோ 5:18; யோவே 2; ஒப 15; செப் 1:8,18; செப் 2:2-3; சக 14; மல் 4; மத் 24:29-31; மத் 25:31-46; 1தெச 5:2; 2தெச 1:7-10; 2தெச 2:1-12; யூதா 1:14; வெளி 19:11-21; வெளி 20:1-10).

"இரவிலே திருடன் வருகிறவிதமாய்" - 1தெச 5:2-4; 2பேதுரு 3:10; வெளி 3:3; வெளி 16:15 ஆகிய வசனங்களில் கர்த்தருடைய நாள் எப்படி வருமென்று இவ்வாறு விளக்கப் பட்டிருக்கிறது. வெளி 3:3 ஆவது வசனத்தில் சர்தை சபையின் நியாயத் தீர்ப்பைக் குறித்து கூறப்பட்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வருகையும், திருடன் வருகிற விதமாக இருக்கும். (மத் 24:43).

"அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்" - தானியேலின் எழுபதாவது வாரத்தில் முதல் மூன்றரை வருஷங்களில் அந்திக்கிறிஸ்து பத்து ராஜ்ஜியங்களை வெற்றி பெறுவான். (தானி 7:23-24; வெளி 13, வெளி 17) தானியேலின் இறுதி மூன்றரை வருஷங்களில் மேலும் பல தேசங்களைச் சாத்தான் வெற்றி பெறுவான். (தானி 11:40-45) உலகத்தில் சமாதானமும், பாதுகாப்பும் உண்டாயிருக்கிறது என்று உலகத்தார் நினைப்பார்கள். இனிமேல் யுத்தங்கள் நடைபெறாது என்றும் கருதுவார்கள். (சக 14) சமாதானத்தின் காலத்தையும், ஆசீர்வாதத்தின் காலத்தையும் ஜனங்கள் எதிர்நோக்கியிருப்பார்கள். எருசலேம் பாதி கைப்பற்றப்பட்டிருக்கும்போது கர்த்தர் சடிதியாய் வருவார். அர்மெகதோனில் எல்லா தேசங்களின்மீதும் அழிவு சடிதியாய் வரும். (சக 14; யோவே 3; வெளி 19:11-21).

சடிதி (sudden) - αἰφνίδιος - aiphnidios - 160

பெயரடை - நினையாத, சடிதியாய் (லூக்கா 21:34, 1கொரி 5:5., 1தெச 5:3)

"கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல" - பிள்ளை பிறக்கும் காலத்தில் கர்ப்பவதிகளுக்கு வேதனை உண்டாகும். வேதனை உண்டாகும்போது தனக்கு பிள்ளை பிறக்கப்போகிறது என்பதை அவள் அறிந்திருப்பாள். ஆனாலும் எந்த நாளில், எந்த வேளையில் தனக்குப் பிள்ளை பிறக்கும் என்பது கர்ப்பவதிக்குத் தெரியாது. அதுபோலவே கர்த்தருடைய நாளும் எப்போது வரும் என்று யாருக்கும் தெரியாது. (மத் 24:36,39,42-51; மத் 25:13, மாற்கு 13:32)

I தெசலோனிக்கேயர் – தொகுப்புரை

5 அதிகாரம்

"அவர்கள் தப்பிப்போவதில்லை" - எல்லா தேசங்களின்மீதும் அழிவு சடிதியாய் வரும். தேசத்தின் பட்டணங்கள் பூமியதிர்ச்சியினால் அழிந்து விழும். அர்மெகதோனில் நடைபெறும் யுத்தத்தில் தேசத்தின் சேனைகளில் ஆறில் ஒரு பகுதியைத் தவிர மற்றவர்கள் அழிக்கப் படுவார்கள். (எசே 39:2; சக 14:1-5,16-21; வெளி 19:11-21) ஆயிரம் வருஷ அரசாட்சியில் பங்குபெறுவதற்காக பலர் ஜீவனோடு விடப்படுவார்கள். (சக 14:16-21; ஏசா 2:1-4; மத் 25:31-46)

2. கர்த்தருடைய நாள் விசுவாசிகளை திருடனைப்போல் பிடித்துக் கொள்ளக்கூடாது

1தெச 5:4 சகோதரரே, அந்த நாள் திருடனைப்போல உங்களைப் பிடித்துக் கொள்ளத்தக்கதாக, நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர்களல்லவே.

1தெச 5:5 நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே.

"நீங்கள் அந்தகாரத்திலிருக்கிறவர் களல்லவே" - விசுவாசிகள் கர்த்தருடைய நாளைக் குறித்து அந்தகாரத்தில் இருக்கவில்லை. (1தெச 5:1-2,4-5,9) வேதவசனம் இதைக் குறித்துத் தெளிவாக உபதேசிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குக் குறைந்தபட்சம் ஏழு வருஷங்களுக்கு முன்பாகவே இயேசுகிறிஸ்து சபையை எடுத்துக் கொள்வதற்காக மத்திய ஆகாயத்திற்கு வருவார். (1தெச 5:2-5, 2தெச 2:7, வெளி 4:1)

புறஜாதியாரை நியாயம் தீர்ப்பதற்காகத் தேவன் இரவு வேளையில் அவர்கள் கவனக் குறைவாகவும், நித்திரையாகவும் இருக்கும்போது வருவார் என்று யூதமார்க்கத்தார் தங்களுடைய பாரம்பரியத்தின் படி நம்புகிறார்கள். பகற்காலத்தில் தாங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளும் போது தேவன் தங்களை நியாயம் விசாரிப்பார் என்பதும் யூதமார்க்கத்தாரின் நம்பிக்கையாகும். சபை எடுத்துக் கொள்ளப்படும்போது கைவிடப்பட்ட யூதருக்கும், புறஜாதியாருக்கும் திருடன் வருகிற பிரகாரமாய் கர்த்தருடைய நாள் அவர்கள்மீது வரும். தேவனுடைய பரிசுத்தவான்கள் மட்டுமே மறுரூபமடைந்து கர்த்தருடைய நாளிலிருந்து தப்பிப்பார்கள். (1தெச 5:4-5,9; லூக்கா 21:36; 2தெச 2:7)

"நீங்களெல்லாரும் வெளிச்சத்தின் பிள்ளைகளும், பகலின் பிள்ளைகளுமாயிருக்கிறீர்கள்; நாம் இரவுக்கும் இருளுக்கும் உள்ளானவர்களல்லவே" - சடிதியான அழிவு வரும்போது விசுவாசிகள் அதிலிருந்து தப்பித்துக் கொள்வார்கள். (1தெச 5:4-5,9). ஏனெனில் விசுவாசிகள் வெளிச்சத்தின் பிள்ளைகளாகவும், பகலின் பிள்ளைகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் இரவுக்கும், இருளுக்கும் உள்ளானவர்கள் அல்ல. இருளின் பிள்ளைகளுக்கே சடிதியான அழிவு நியமிக்கப்பட்டிருக்கிறது. (1தெச 5:9; 2தெச 2:7)

3. கர்த்தருடைய நாளைக் குறித்து விசுவாசிகள் செய்ய வேண்டிய காரியம்

1தெச 5:6 ஆகையால், மற்றவர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், விழித்துக் கொண்டு தெளிந்தவர்களாயிருக்கக்கடவோம்.

1தெச 5:7 தூங்குகிறவர்கள் இராத்திரியிலே தூங்குவார்கள்; வெறி கொள்ளுகிறவர்கள் இராத்திரியிலே வெறிகொள்ளுவார்கள்.

1தெச 5:8 பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம்.

5 அதிகாரம்

அழிவு சடிதியாய் வரும்போது தப்பித்துக் கொள்ளும் வழிகள்

1. தூங்காமல் இருக்க வேண்டும். (2தெச 5:6-7)
2. விழித்துக் கொண்டிருக்க வேண்டும். (மத் 24:42-51, 1தெச 5:6)
3. தெளிந்தவர்களாக இருக்க வேண்டும். (1தெச 5:6-8)
4. விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச் சீராவையும் தரித்துக் கொண்டிருக்க வேண்டும். (1தெச 5:8; எபே 6:10-18)

விசுவாசிகளாகிய நாம் தூங்காமல் விழித்திருந்து தெளிந்த புத்தியுள்ளவர்களாக இருந்தால் மட்டும் போதாது. நாம் விசுவாசத்தின் போராட்டத்தையும் போராடி நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். (1தீமோ 6:12; 1கொரி 9:24-27).

தூங்காமல் (Not sleep) - καθεύδω - katheudoo - 2518

வினைச்சொல் - நித்திரையாயிரு, நித்திரைபண்ணு, தூங்கு (to repose one's self in sleep, sleeping, indifferent, careless, unfaithful virgins) (மத் 25:5) - இயேசுகிறிஸ்துவோடு விழித்திருந்து ஜெபிக்க முடியாமல் தூங்கிய சீஷர்கள். (மத் 26:45) மாறுபாடாக ஜீவித்து பின்வாங்கிப்போன மனுஷன். (எபே 5:14; 1தெச 5:6,7,8).

தெளிந்தவர்களாயிரு (Be sober) - νήφω - neephoo - 3525

வினைச்சொல் - தெளிந்தவர்களாயிரு, புத்தியுள்ளவர்களாயிரு, மனத் தெளிவுள்ளவனாயிரு (to drink no intoxicants; live soberly, righteously) (தீத்து 2:11-12). be sober (1தெச 5:6,8; 1பேதுரு 1:13; 1பேதுரு 5:8) watch (2தீமோ 4:5; 1பேதுரு 4:7). புறஜாதியார் மத்தியில் பகலில் மதுபானம் அருந்தி தெளிவில்லாமல் இருப்பது அவமானமான காரியமாகக் கருதப்படுகிறது. ஆகையினால் தேவனுடைய பிள்ளைகள் எப்போதும் தெளிந்தவர்களாக இருக்க வேண்டும்.

"இரட்சிப்பின் நம்பிக்கை" - இரட்சிப்பு என்பதே ஒரு நம்பிக்கை. இரட்சிப்பின் ஆசீர்வாதங்களை நாம் நித்திய ஜீவனில் அனுபவிப்போம். (1தெச 5:8; ரோமர் 8:20-25; 2தெச 2:16; 1பேதுரு 1:5,9,13). நாம் நித்திய ஜீவனைப் பெற்றிருந்தாலும் நித்திய ஜீவனும் ஒரு நம்பிக்கையே. (தீத்து 1:2; தீத்து 3:7; எபி 3:6; எபி 6:11,11,18-19; 1பேதுரு 1:3,13). நாம் மரித்த பின்புதான் நம்மால் நித்திய ஜீவனை அனுபவிக்க முடியும். (மத் 7:13-14; மத் 18:8-9; மத் 19:28-29; மாற்கு 10:29-30; லூக்கா 18:29-30; ரோமர் 2:7; ரோமர் 6:21-23; கலா 6:7-8; 1தீமோ 1:16; 1தீமோ 4:8; 1தீமோ 6:12,19; 1பேதுரு 1:5,9,13; 1பேதுரு 3:7; 1யோவான் 2:25; யூதா 1:20-24; தானி 12:2; யோவான் 5:28-29).

4. **கர்த்தருடைய நாளுக்கு முன்பாக விசுவாசிகள் எடுத்துக்கொள்ளப் படுவார்கள்** - (2தெச 2:7; வெளி 1:19)

1தெச 5:9 தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்காமல், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் இரட்சிப்படைவதற்கென்று நியமித்தார்.

1தெச 5:10 நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரை அடைந்தவர்களானாலும், தம்முடனே கூட நாம் ஏகமாய்ப் பிழைத்திருக்கும்படி அவர் நமக்காக மரித்தாரே.

5 அதிகாரம்

1தெச 5:11 ஆகையால் நீங்கள் செய்து வருகிறபடியே, ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்.

"தேவன் நம்மை கோபாக்கினைக்கென்று நியமிக்காமல்" - சடிதியான அழிவு, மகா உபத்திரவக்காலம் ஆகியவற்றில் பங்கு பெறுவதற்காக தேவன் நம்மை நியமிக்கவில்லை. (1தெச 5:2-3; வெளி 6:1-19:21,மத் 24:15-21) நித்திய நரகத்தில் தள்ளப்படுவதற்காகவும் தேவன் நம்மை நியமிக்கவில்லை. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் நாம் இரட்சிப்படைவதற்கென்று நம்மை நியமித்திருக்கிறார். தம்மோடு தம்முடைய பரிசுத்தவான்கள் நித்திய காலமாக ஜீவிக்க வேண்டும் என்பதற்காகவே தேவன் தமது சபையை எடுத்துக் கொள்ளப்போகிறார். (1தெச 5:9-10; 1தெச 4:13-18; 2தெச 2:7, வெளி 4:1)

"நாம் விழித்திருப்பவர்களானாலும், நித்திரையடைந்தவர்களானாலும்" - 1தெச 4:13-18 ஆகிய வசனங்களில் கூறப்பட்டிருக்கும் சபை எடுத்துக் கொள்ளப்படுவதைப் பற்றிய காரியங்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்த பரிசுத்தவான்களுக்காகவும், கர்த்தருக்குள் ஜீவிக்கிற பரிசுத்தவான்களுக்காகவும் நடைபெறும் காரியமாகும். (1தெச 5:1-3,9; மத் 24:15-21; வெளி 6:1-19:21)

"ஒருவரையொருவர் தேற்றி, ஒருவருக்கொருவர் பக்திவிருத்தி உண்டாகும்படி செய்யுங்கள்" - 1தெச 4:18 ஆவது வசனத்திலும் இந்தக் கருத்து கூறப்பட்டிருக்கிறது. சபை எடுத்துக் கொள்ளப்படும்போது விசுவாசிகள் எடுத்துக் கொள்ளப்படுவதினால் அவர்கள் சடிதியான அழிவிலிருந்தும், உபத்திரவக் காலத்திலிருந்தும் பங்குபெறாமல் தப்பித்துக் கொள்வார்கள். சபை எடுத்துக் கொள்ளப் படும்போது கைவிடப்பட்டவர்கள் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்பாக சடிதியான அழிவை அனுபவிப்பார்கள். (வெளி 6:1-19:21, 2தெச 2:7)

IX. நடைமுறை உபதேசங்கள்

1. ஊழியக்காரரை மதிக்க வேண்டும் - (எபி 13:7,17)

1தெச 5:12 அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணை செய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து,

1தெச 5:13 அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். உங்களுக்குள்ளேசமாதானமாயிருங்கள்

மதித்தல் (over) - προΐστημι - **proisteemi** - 4291

விணைச்சொல் - முதலாளியாயிரு, நடத்து, விசாரணைசெய் **(to set over; be at the head of; be the chief) be over** (1தெச 5:12); **rule** (ரோமர் 12:8; 1தீமோ 3:4-5,12; 1தீமோ 5:17); **maintain** (தீத்து 3:8,14).

அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், உபதேசிக்கிறவர்கள், மேலும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்கிற ஏராளமானோர் விசுவாசிகளுக்குப்புத்தி சொல்லுகிறார்கள். அவர்களை நாம் மதித்து நடக்க வேண்டும். (எபே 4:11; 1கொரி 12:28).

"அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக் கொள்ளும்படி" - ஊழியக்காரர்களை மதித்தால் மட்டும் போதாது. அவர்கள்மீது மிகவும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

மிகவும் (very highly) - περισσός - **perissos** - 4053

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

5 அதிகாரம்

பெயரடை - மிஞ்சின, விசேஷித்த, மேன்மையுள்ள, அதிக, மிகவும், உறுதியாய், பரிபூரணமான **beyond measure** (மாற்கு 6:51); **exceedingly abundantly above** (எபே 3:20); **exceedingly** (1தெச 3:10); **very highly** (1தெச 5:13); **more abundantly** (யோவான் 10:10); **more** (மத் 5:37,47); **superfluous** (2கொரி 9:1); **advantage** (ரோமர் 3:1) ஊழியக்காரர்களை நாம் அவர்களுடைய ஊழியங்களின் நிமித்தம் மதிக்க வேண்டும்.

2. கிறிஸ்துவின் வருகையின் நிமித்தம் கிறிஸ்தவருக்கு பதினான்கு கட்டளைகள்

1தெச 5:14 மேலும், சகோதரரே, நாங்கள் உங்களுக்குப் போதிக்கிறதென்னவென்றால், ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்திசொல்லுங்கள், திடனற்றவர்களைத் தேற்றுங்கள், பலவீனரைத் தாங்குங்கள், எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாயிருங்கள்.

1தெச 5:15 ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள்; உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்.

1தெச 5:16 எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்.

1தெச 5:17 இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்.

1தெச 5:18 எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

1தெச 5:19 ஆவியை அவித்துப் போடாதிருங்கள்.

1தெச 5:20 தீர்க்கதரிசனங்களை அற்பமா யெண்ணாதிருங்கள்.

1தெச 5:21 எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

1தெச 5:22 பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.

ஒழுங்கில்லாதவர்கள் **(unruly)** - **ἀτάκτως - ataktoos** - 814

வினையடை - ஒழுங்கற்று (2தெச 3:6,7,11) - பாதை விலகி நடந்து சபையில் தங்களுடைய கடமையை நிறைவேற்றாதவர்கள்.

பலவீனர் **(feebleminded)** - **ὀλιγόψυχος - oligopsychos** - 3642

பெயரடை - பலவீனமான **(fainthearted)** - யுத்தத்தில் நம்பிக்கையில்லாமல் இருதயம் சோர்ந்துபோய் பலவீனமாக இருக்கிறவன்.

தாங்கு **(support)** - **ἀντέχω** - **antechoo** - 472

வினைச்சொல் - பற்று, தாங்கு **(to hold one's hand; to shade one's eyes; to be a help) support** (1தெச 5:14); **hold fast** (தீத்து 1:9); **hold to** (மத் 6:24; லூக்கா 16:13).

1தெச 5 ஆவது அதிகாரத்தில் பவுல் கூறியிருக்கும் புத்திமதிகள்

1. நாம் ஆவிக்குரிய ரீதியாகத் தூங்காமல் இருக்க வேண்டும். (1தெச 5:6).

2. விரோதிகளைக் குறித்து மிகுந்த எச்சரிப்போடு விழித்துக் கொண்டிருக்க வேண்டும். (1தெச 5:6)

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

5 அதிகாரம்

3. மதுபான வெறி கொள்ளாமல் தெளிந்தவர்களாக இருக்க வேண்டும். (1தெச 5:6-7).

4. தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ள வேண்டும். (1தெச 5:8; எபே 6).

5. ஒருவரையொருவர் தேற்ற வேண்டும். (1தெச 5:11; 1தெச 4:18).

6. ஒருவருக்கொருவர் பக்தி விருத்தி உண்டாகும்படி செய்ய வேண்டும். (1தெச 5:11).

7. ஊழியக்காரர்களை மதிக்க வேண்டும். (1தெச 5:12).

8. ஊழியக்காரர்களை மிகவும் அன்பாய் எண்ணிக் கொள்ள வேண்டும். (1தெச 5:13).

9. உங்களுக்குள்ளே சமாதானமாயிருக்க வேண்டும். (1தெச 5:13).

10. ஒழுங்கில்லாதவர்களுக்குப் புத்தி சொல்ல வேண்டும். (1தெச 5:14)

11. திடனற்றவர்களைத் தேற்ற வேண்டும். (1தெச 5:14)

12. பலவீனரைத் தாங்க வேண்டும். (1தெச 5:14; 1கொரி 8:10)

13. எல்லாரிடத்திலும் நீடிய சாந்தமாய் இருக்க வேண்டும். (1தெச 5:14).

14. ஒருவனுக்கும் தீமை செய்யக்கூடாது. (1தெச 5:15).

15. உங்களுக்குள்ளும், மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மை செய்ய நாட வேண்டும். (1தெச 5:15).

16. எப்பொழுதும் சந்தோஷமாயிருக்க வேண்டும். (1தெச 5:16)

17. எல்லாக் காரியங்களைக் குறித்தும் எப்பொழுதும் ஜெபம் பண்ண வேண்டும். (1தெச 5:17).

18. எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். (1தெச 5:18).

19. ஆவியை அவித்துப்போடக்கூடாது. (1தெச 5:19)

20. தீர்க்கதரிசனங்களை அற்பமாய் எண்ணக்கூடாது. (1தெச 5:20).

21. எல்லாவற்றையும் சோதித்துப் பார்த்து, நலமானதைப் பிடித்துக் கொள்ள வேண்டும். (1தெச 5:21).

22. பொல்லாங்காய் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டுவிலக வேண்டும். (1தெச 5:22).

3. சபை எடுத்துக் கொள்ளப்படும் போது நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம் ஆகியவை குற்றமற்றதாயிருக்கும் படி காக்கப்பட வேண்டும் - (1கொரி 15:51-58; 2கொரி 5:1-8; பிலி 3:21; 1தெச 3:13; எபே 5:27)

1தெச 5:23 சமாதானத்தின் தேவன் தாமே உங்களைமுற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவிஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக.

1தெச 5:24 உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்.

தீர்க்கதரிசன எண் - 5

"சமாதானத்தின் தேவன் தாமே உங்களைமுற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவிஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக. உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்". (1தெச 5:23-24) இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை.

5 அதிகாரம்

1தெசலோனிக்கேயர் 5 ஆவது அதிகாரத்தில் கூறப்பட்டிருக்கும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறவரைச் சமாதானத்தின் தேவன் பரிசுத்தப்படுத்துவார். பரிசுத்தப்படுத்துதல் என்பதற்கு தேவனுக்காகவும், அவருடைய ஊழியத்திற்காகவும் வேறுபிரிப்பது என்று பொருள்.

"ஆவி" - (1யோவான் 4:1)

ஆத்துமா (soul) - ψυχή - psychee - 5590

பெண்பால் பெயர்ச்சொல் - பிராணன், ஜீவன், ஆத்துமா, மனம், உயிர் (life; soul or spiritual part in contrast to the material body; a departed soul; also the spirit which still retains the shape and size of its living owner; the seat of the desires, feelings, passions, appetites, emotions) புதிய ஏற்பாட்டில் ஆத்துமா என்பதற்கான கிரேக்க வார்த்தை "ப்சைக்கி" (psychee) என்பதாகும். இதற்கு இணையான எபிரெய வார்த்தை "நேபேஷ்" (nephesh) அப் 2:27 = சங் 16:10; 1கொரி 15:45=ஆதி 2:7

ஜீவன் - נֶפֶשׁ - neh'-fesh - 5315

பெண்பால் பெயர்ச்சொல் - ஜந்து, ஜீவன், ஆத்துமா, உயிர், ஜனம், பிராணன், சம்மதி, மனது, மனம், பேர், பிறப்பு, ஆசை, இருதயம், பிராணி, செத்தவன், இறந்து போன பிணம், மனிதன், மிருகத்துக்கு மிருகம், சவம், பிரேதம், யாதொருவர், உள்ளம், இஷ்டம், ஆவல், பசி, உட்கருத்து, ஜீவனுக்கு ஜீவன், சுவாசம், சித்தம், இச்சை, போஜனம், நெஞ்சு, மனுஷர்

"ஆத்துமா"

1. மிருகங்களின் ஜீவன்கள் (வெளி 8:9; வெளி 16:3)

2. தனிப்பட்ட மனுஷன் (அப் 2:41,43; அப் 3:23; அப் 7:14; அப் 27:37; ரோமர் 2:9; ரோமர் 13:1; 1கொரி 15:45; யாக் 5:20; 1பேதுரு 3:20; 2பேதுரு 2:14; வெளி 6:9; வெளி 18:13; வெளி 20:4)

3. மனுஷனுடைய ஜீவன் - இது அழிந்துபோகும், இரட்சிக்கப்படும் - இரட்சிக்கப்பட்ட ஜீவன். (மத் 2:20; மத் 6:25; மத் 10:39; மத் 16:25; மத் 20:28; மாற்கு 3:4; மாற்கு 8:35; மாற்கு 10:45; லூக்கா 6:9; லூக்கா 9:24,56; லூக்கா 12:22-23; லூக்கா 14:26; லூக்கா 17:33; யோவான் 10:11-17; யோவான் 12:25; யோவான் 13:37-38; யோவான் 15:13; அப் 15:26; அப் 20:10,24; அப் 27:10,22; ரோமர் 11:3; ரோமர் 16:4; பிலி 2:30; 1கொரி 3:16; வெளி 12:11)

4. மனுஷனுடைய ஜீவன் - இது அழிந்துபோகும், இரட்சிக்கப்படும் - இரட்சிக்கப்பட்ட ஆத்துமா. (மத் 10:28; மத் 16:26; மாற்கு 8:36-37; லூக்கா 12:20; லூக்கா 21:19; 1தெச 2:8; 1தெச 5:23; எபி 4:12; எபி 6:19; எபி 10:39; எபி 13:17; யாக் 1:21; 1பேதுரு 1:9; 1பேதுரு 2:11,25; 1பேதுரு 4:19)

5. மனுஷன் தன்னை "என் ஆத்துமா" என்று அழைப்பது. (மத் 11:29; மத் 12:18; மத் 26:38; மாற்கு 14:34; லூக்கா 1:46; லூக்கா 12:19; யோவான் 12:27; எபி 10:38; 1பேதுரு 1:22)

6. ஒருவனுடைய வல்லமைகள். (மத் 22:37; லூக்கா 2:35; லூக்கா 10:27; அப் 4:32; 3யோவான் 1:2; எபே 6:6; பிலி 1:27)

"சரீரம்" - ஒருவனுடைய ஆத்துமாவும், ஆவியும் அவனுடைய சரீரத்தில் உள்ளது. இந்தச் சரீரம் மரிக்கும்போது மறுபடியும் மண்ணுக்குத் திரும்புகிறது. (ஆதி 3:19) உயிர்த்தெழும்போது அழிந்து போகும் சரீரம் அழியாத நித்திய சரீரத்தைப் பெற்றுக் கொள்கிறது. (1கொரி 15:54-58).

I தெசலோனிக்கேயர் - தொகுப்புரை

5 அதிகாரம்

வரும்போது (unto) - ἐν - en - 1722

முன் இடைச்சொல் - ஆல், இல், உடன் "at" (1தெச 2:19; 1தெச 3:13) - சபை எடுத்துக் கொள்ளப்படும்போது விசுவாசிகள் தேவனுக்கென்றும், அவருடைய சித்தத்திற்கென்றும் முழுவதுமாக வேறு பிரிக்கப்படுவார்கள். அவர்களுடைய சரீரமும், ஆத்துமாவும், ஆவியும் முழுமை பெறும். (1கொரி 15:51-58; பிலி 3:21; ரோமர் 8:18-25; 1பேதுரு 1:5,9,13)

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது" - இந்த நிருபத்தின் ஒவ்வொரு அதிகாரத்திலும் கர்த்தருடைய வருகையானது ஒவ்வொரு விதமாக எழுதப்பட்டிருக்கிறது. (1தெச 1:10; 1தெச 2:19; 1தெச 3:13; 1தெச 4:13-18; 1தெச 5:23)

X. முடிவுரையும் ஆசீர்வாதமும்

1தெச 5:25 சகோதரரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.

1தெச 5:26 சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்.

1தெச 5:27 இந்த நிருபம் பரிசுத்தமான சகோதரர் யாவருக்கும் வாசிக்கப்படும் படி செய்ய வேண்டுமென்று கர்த்தர் பேரில் ஆணையிட்டு உங்களுக்குச் சொல்லுகிறேன்.

1தெச 5:28 நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனே கூட இருப்பதாக ஆமென்.

"சகோதரரே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" - பவுல் தன்னுடைய நிருபத்தில் பரிசுத்தவான்கள் தனக்காக ஜெபம் பண்ண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார். விசுவாசிகள் செய்யும் பொருளாதார உதவிகளை விட அவர்கள் கர்த்தரிடத்தில் தனக்காக ஏறெடுக்கும் ஜெபம் அதிகப் பிரயோஜனமுள்ளதென்று பவுல் கருதுகிறார்.

"சகோதரரெல்லாரையும் பரிசுத்த முத்தத்தோடே வாழ்த்துங்கள்" - இது கிழக்குத் தேசங்களில் நிலவி வரும் ஒரு கலாச்சாரப் பழக்கமாகும்.

"யாவருக்கும் வாசிக்கப்படும்படி செய்யவேண்டும்" - சில சமயங்களில் பவுல் எழுதி அனுப்பின நிருபங்களை எல்லா சபைகளிலும் வாசிக்காமல் விட்டுவிட்டார்கள். தெசலோனிக்கேயாவிலும், அதன் சுற்றிலுமுள்ள ஒருசில சபைப் பிரிவினர்கள் பவுலின் நிருபத்தை வாசிக்காமல் தடுத்திருக்கலாம். ஆகையினால் தன்னுடைய நிருபத்தைச் சகோதரர் யாவருக்கும் வாசிக்கும்படி செய்ய வேண்டுமென்று பவுல் கர்த்தர் பேரில் ஆணையிட்டு அவர்களுக்குக் கூறுகிறார்.

"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை" - பவுல் தன்னுடைய நிருபத்தைத் துவங்கும்போதும், முடிக்கும்போதும் கிறிஸ்துவின் கிருபையைக் குறிப்பிடுகிறார்.